JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 13 | இதழ் 9 | நவம்பர் 2022 | ஆண்டு சந்தா ₹100



# INDEX

வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்


04 இயேசுவோடு என் பயணம்

10 பாதுகாப்பவர்!

20 Petra

26 Red alert


வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| A/c. Name | : | JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : | 054100710400515 |
| BANK | : | TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : | Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : | 000054 |
| IFS CODE | : | TMBL0000054 |
| MICR CODE | : | 627060021 |
| SWIFT CODE | : | TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



ஆசிரியர்: மோகன் சி. லாசரஸ் இணை ஆசிரியர்: அவினாஷ் ஆசிரியர் குழு: வயலா | ஜிஷ்யா ரேச்சல் | கிளாடிஸ் | ரவி | சுமா | கெத்சி கிளாா்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜான்
வடிவமைப்பு: ஜாஷ்வா



## தலைவாசல்

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

பாதுகாப்பு என்றால் காலாட்படை, (தரைப்படை) கப்பல் படை, விமானப்படை என்று தான் நம் எண்ணத்தில் தோன்றும். காரணம் இவர்கள் அனைவரும் நம் தேசத்தைக் காக்கப் போராடும் போராளிகள். ஆனால், நகரத்தில் ஓர் ஆபத்து என்றால் குறிப்பாக, தீயினால் ஒரு ஆபத்து என்றால், விரைந்து வந்து உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களை காக்க செயல்படும் படை தான் தீயணைப்புப் படை. ஒருசில நேரங்களில் மக்களைப் பாதுகாக்க தங்கள் உயிரையும் மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு மிகுந்த பொறுப்புடனும், தியாகத்துடனும் சிலர் செயல்படுவார்கள். அந்த பட்டியலில் 9/11 Twin Tower Blastல் பிறரை காப்பாற்ற தன் உயிரையும் மாய்த்துக் கொண்டவர் ஓரியோ ஃபால்மர் (Orio Palmer) முதலாவது North tower பாதிப்புக்குள்ளான பின்னர் சில நிமிடங்களில் United Airlines Flight 175 South Tower 78வது தளத்தைத் தாக்கியதால், பெரும் பதட்டம் உண்டானது. உடனே தீயணைப்பு வீரரான ஓரியோ பால்மர், அவருடைய குழுவுடன், அந்த கட்டிடத்திற்குள் நுழைந்து மக்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டார். அனைத்து லிப்டும் செயல்படாத போதும், செயல்படும் ஒரு லிப்டைக் கண்டுபிடித்து அதை பயன்படுத்தி, 41– ஆம் தளத்தில் சென்று மீட்புப் பணியை மேற்கொண்டார். South Tower இடிந்து தரைமட்டம் ஆவதற்கு முன்னால் பலரை அவர் காப்பாற்றினார். தான் நின்று கொண்டிருக்கும் கட்டிடம் இன்னும் சில நிமிடங்களில் தரைமட்டமாகப் போகிறது என்று தெரிந்த போதும், கடைசி நிமிடம் தன் உயிர் பிரியும் வரையும், அவரோடு பணிபுரியும் குழுவிடம், எப்படியும் எல்லா மக்களையும் காப்பாற்ற வேண்டுமென்று அறிவுறுத்திக்கொண்டே இருந்தார். (Orio Palmer)

இதேபோல் தான் நமக்கு வரும் ஒவ்வொரு ஆபத்திலிருந்தும் கண்ணிகளிலிருந்தும் தேவன் நம்மை பாதுகாக்கிறார். சத்துரு எவ்வளவுதான் தீமையை விதைத்து, நம் வாழ்க்கையை அளிக்க திட்டம் போட்டாலும், தேவன் நம்மை சுற்றி ஒரு அரணான பாதுகாப்பு தூணாக உள்ளார். அவருடைய பாதுகாப்பை மீறியோ, மிஞ்சியோ எதுவும் உன்னைத் தொட முடியாது.

உனக்காக உயிர் தந்தவர் அவர், உன்னை விட்டுவிடவும் மாட்டார், உன்னை விட்டுக் கொடுக்கவும் மாட்டார்! அவர் உன் பாதுகாவலராக இருக்கும்போது, எந்த ஆபத்தும் உன்னை அணுகாது!



**இதேபோல் பாவத்தில் மரித்துக் கொண்டிருக்கும் வாலிபர்களை மீட்க போராடு, யோசுவாவைப்போல் நீ எழும்பினால் தேசத்தின் வாலிபர்களை மீட்க முடியும்.**

**உன் சார்பில் நின்று போராடவும், உன்னைப் பாதுகாத்து பெலப்படுத்தவும் பாதுகாவலனாகிய இயேசு கிறிஸ்து உன்னோடு உண்டு!!**

கிறிஸ்துவின் பணியில்

**அவினாஷ்**

சாட்சி : தொகுப்பு ஜீஷ்யா



# இயேசுவோடு என் பயணம்

**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து சிறு வயதில் வியாதியினால் பாதிக்கப்பட்ட நேரத்தில் தன் தாயாரின் ஜெபத்தைக் கேட்டு வியாதியை குணப்படுத்தினார். இன்றைக்கு வாலிப வயதில் ஆண்டவருக்காக ஊழியம் செய்து கொண்டிருக்கும் சகோதரியுடன் ஓர் நேர்காணல்...**

**உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயத்தைப் பற்றி சொல்லுங்களேன்?**

என் பெயர் அன்ன ரோஸ்லின், நான் தென்காசி மாவட்டம் சுரண்டை அருகில் உள்ள கருவந்தா என்னும் கிராமத்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். திரு. தானியேல் தேவ பிச்சை, திருமதி. அன்ன பாக்கிய செல்விக்கு நான் மூத்த மகளாகப் பிறந்தேன். எனக்கு ஒரு தங்கையும், ஒரு தம்பியும் உள்ளனர். எனது குடும்பம் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு செய்பவர்கள்.



நான் பிறந்த சில நாட்களிலேயே அடிக்கடி வியாதியால் பாதிக்கப் படுவேன். பிழைக்கவே மாட்டேன் என்ற சூழ்நிலையில் இருந்திருக்கிறேன் என்று எனது அம்மா சொல்வார்கள். அந்த நேரத்தில் எனது அம்மா எனது மகளை உயிரோடு கொடுத்தால், அவளால் இயன்ற ஊழியத்தை செய்வாள் என்று என்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்கள். ஆனாலும் என் சிறுபிராயத்தில் பலமுறை வியாதிப்பட்டுள்ளேன். ஆனாலும் ஆண்டவர் என்னை அற்புதமாய் பாதுகாத்தார். என் சிறுபிராயத்தில் ஒருமுறை சுற்றுலா செல்லும்போது எனது அப்பாவை தேடி செல்கிறேன் என வழிதவறி சென்றேன். என்னை அனைவரும் தேடிக் கொண்டிருக்கும் போது, ஒரு சகோதரி என்னை என் பெற்றோரிடம் கொண்டு போய் சேர்த்திருக்கிறார்கள். இப்படி தேவன் என்னை அநேக நேரங்களில் பாதுகாத்து வந்தார். என் சிறு வயதிலேயே நான் ஒழுங்காக ஆலயம் செல்வேன். ஞாயிறு பாடசாலை வகுப்புகளில் தவறாமல் கலந்து கொள்வேன். வேத பாட தேர்வுகள் மற்றும் ஞாயிறு பாடசாலை வகுப்புகள் என எல்லாவற்றிலும் தவறாமல் பரிசுகள் வாங்குவேன். ஆனாலும் ஜென்ம சுபாவங்கள் என்னிடம் காணப்பட்டு கொண்டேதான் இருந்தது.

**ஒகே... ஜென்ம சுபாவம் இருந்தது... ஆலயத்தில் பரிசுகள் பெறுவீர்கள் என்று சொன்னீர்கள்... அப்படியானால் எப்பொழுது இரட்சிக்கப்பட்டீர்கள்?**

நான் எனது 15ம் வயதில் பத்தாம் வகுப்பு படிக்கும்போது, எனது ஆலயத்திலிருந்து ஒரு வாலிபர் கூடுகைக்கு

அழைத்துச் சென்றார்கள். அங்குதான் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டேன். அதன்பின் தினமும் 1 மணி நேரம் ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து ஜெபிப்பேன். ஆரம்பத்தில், இந்த ஜெபம் எவ்வளவு நாள் என்று கேலி, கிண்டல் செய்தார்கள். ஆனால் ஆண்டவரின் கிருபை என்னை ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வைத்தது.

**சரி... இரட்சிக்கப்பட்டு ஜெபிக்க ஆரம்பித்தீர்கள்... உங்களது பள்ளிப் படிப்பைப் பற்றி சொல்லுங்களேன்?**

எனது சிறுவயதிலிருந்தே தேவன் எனக்கு நல்ல கல்வி ஞானத்தைத் தந்திருந்தார். நன்றாக படிப்பேன். எல்ல ஆசிரியர்களிடத்திலும் எனக்கு நல்ல பெயர் உண்டு.. தேவனுடைய கிருபையினால் பள்ளி பருவத்திலும் எப்பொழுதும் ஆண்டவருக்கே முதலிடம் கொடுப்பேன். ஆனால் சினிமா பார்ப்பது, கோபப்படுவது போன்ற சில காரியங்கள் என்னிடம் இருந்து கொண்டே இருந்தது. பள்ளிப் படிப்பை நல்ல மதிப்பெண்களுடன் முடிக்க தேவன் கிருபை செய்தார்.



**சூப்பர்... பள்ளிப் படிப்பை முடித்தீர்கள்... கல்லூரி வாழ்க்கை எப்படி இருந்தது?**

நான் என் பள்ளி படிப்பை முடித்தபின் Bio-Tech படிக்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனால் எனக்கு வாய்ப்பு கிடைக்காததால், எனது அம்மாவின் விருப்பப்படி இன்ஜினியரிங் படிப்பதற்கு சென்னையில் உள்ள கல்லூரிக்கு Admission போட்டேன். ஆனால் ஆண்டவர் அதை தடுத்து என் கிராமத்திற்கு அருகிலுள்ள பொறியியல் கல்லூரியிலேயே படிக்க வைத்தார். அப்போது ஆண்டவரின் திட்டம் எனக்கு புரியவில்லை. எனக்கு ஹாஸ்டலில் இருந்து படிக்க வேண்டும் என்பது ஆசை. ஆகையால் தான் சென்னை கல்லூரிக்கு விண்ணப்பம் செய்தேன். அது கிடைக்கவில்லை என்ற ஏக்கம் எனக்குள் இருந்தது. எனது கல்லூரி படிப்பின் ஆரம்ப நாட்களில், நான் இயேசுவை விட்டு பின் வாங்க ஆரம்பித்தேன். படிப்பில் ஏற்பட்ட சிறிய தோல்வியும் என்னை மிகவும் பாதித்தது. எல்லாரையும் போல உலக வாழ்க்கைக்குள் சொல்ல ஆரம்பித்தேன். ஆண்டவரை விட்டு தூரம் போக ஆரம்பித்த எனக்கு சமாதானமில்லை. ஆனால் ஆண்டவர் என்னை அப்படியே விட்டு விடவில்லை. மீண்டும் ஒரு வாலிபர் கூடுகையின் மூலமாக ஆண்டவர் என்னோடு இடைபட்டார். நான் கல்லூரி Lab-ல் இருக்கும் போது துதியின் அபிஷேகத்தால் நிரப்பினார். அவர் என்மேல் அன்பாயிருப்பதை பல காரியங்களின் மூலமாக என்னோடு பேசிக் கொண்டே இருப்பார். என் கல்லூரி காலங்களில் இயேசுவை என் நண்பனாக ஏற்றுக் கொண்டேன். என்னுடைய சிறு சிறு காரியங்களையும் நண்பர்களிடம் பகிர்வதுபோல் இயேசுவிடம் பகிர்ந்து கொள்வேன். என் கல்லூரி நாட்களின் இறுதி ஆண்டில் எனக்கும் இயேசுவுக்கும் வலுவான நட்பு உருவானது.

**சரி... உங்களுக்கும் இயேசுவுக்கும் வலுவான நட்பு உருவானது... உங்களுடைய ஜெப வாழ்கை எப்படி இருந்தது?**

நான் இரட்சிக்கப்பட்ட நாட்களின் ஆரம்பத்தில் ஒரு மணிநேரம் ஜெபிப்பேன். கல்லூரி நாட்களின் ஆரம்பத்தில் என் ஜெப நேரம் குறைந்தே காணப்பட்டது. ஆனால் ஆண்டவரோடு உறவை புதுப்பித்துக் கொண்டபின் முன்புபோல ஜெபிக்க ஆரம்பித்தேன். ஜெபத்தில் புதிய புதிய அனுபவங்களையும், காத்திருக்கும் அனுபவங்களையும் தந்தார். கர்த்தர் என்னோடு தரிசனங்களில் பேசுவார்.

**ஓகே... தேவன் உங்களோடு பேசுகிறார்... படிப்பை முடித்தீர்கள்... வேலைக்கு முயற்சித்தீர்களா?**

நான் கல்லூரி படிப்பை முடித்தபின் சென்னையில் 2 மாதங்கள் தங்கி இருந்து வேலை தேடினேன். நல்ல மதிப்பெண்களும், திறமைகளையும் தேவன் கொடுத்திருந்தும் வேலை ஏதும் கிடைக்கவில்லை. ஒரு நாள் சென்னையில் ஒரு ஆலயத்திற்கு சென்று, உம்முடைய சித்தம் இல்லாமல் சென்னைக்கு வந்திருந்தால் மீண்டும் என்னை சொந்த ஊருக்கே அழைத்துச் செல்லும் என்று ஜெபித்தேன். கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டார். அந்த நேரத்தில் என் அம்மா ஒரு சிறு காரியத்திற்காக என்னை ஊருக்கு அழைத்தார்கள். கிராமத்தில் இருக்கும்போதே தேவன் எனக்கு ஒரு வாக்குக்கொடுத்தார். அதன்படியே என் கிராமத்திற்கு அருகிலேயே Software கம்பெனியில் ஒரு வேலையும் தந்தார். இந்த முறையும் என் ஹாஸ்டல் வாழ்க்கை கனவு நிறைவேறவில்லை.



**சரி... வேலையும் கிடைத்தது... அந்த வேலையை சந்தோஷமாக செய்தீர்களா?**

நான் வேலை பார்த்த இடத்தில் தான் எனக்கு பெரிய பாவ சோதனை வந்தது. அது தேவனை விட்டு என்னை பிரித்து விடுமோ என்று பயந்தேன். ஜெப வாழ்க்கையை இழந்தேன். ஆனால் ஆண்டவர் எந்த சூழ்நிலையிலும் என்னை விட்டு விலகவே இல்லை. நான் வேலையை இராஜினாமா செய்ய முற்பட்டபோது நீ ஜெயித்தவளாய் தான் அந்த இடத்தை விட்டு வெளியே வரவேண்டும் என்று என்னை உற்சாகப்படுத்தி வேலை செய்ய பெலனும் கொடுத்தார். ஆண்டவருடைய கிருபையாலும், அவருடைய மிகுந்த அன்பினாலும் பாதுகாக்கப்பட்டேன். மீண்டும் அதே பாவ சோதனையில் விழும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. ஆனால் ஆண்டவர் அந்தச் சோதனையை ஜெயிக்க கிருபை கொடுத்தார். ஆண்டவரை விட்டுப் பிரிக்கும் இந்த வேலை எனக்கு வேண்டாம் என்று கடந்த வருடம் அக்டோபர் மாதம் என் வேலையை விட்டு விட்டேன். அதற்குப் பிறகு ஒரு youtube சேனல் உருவாக்கி அதில் கிறிஸ்தவ வீடியோக்கள், சிறுகதைகள் மற்றும் வசனங்களை போடுவேன் அது அனைவருக்கும் பிரயோஜனமாக இருந்தது என்று சொல்லுவார்கள். எனது வேலை ஸ்தலத்தில் நான் சந்தித்த சோதனைக்கு பின் அதனால் வந்த மன அழுத்தத்தை போக்குவதற்கு அந்த youtube சேனல் உறுதியா உதவியாக இருந்தது

**ஐயோ... நீங்கள் விரும்பின வேலையை விட்டு விலகினீர்களா... சரி அதன் பிறகு என்ன செய்தீர்கள்?**

என் கல்லூரி படிப்பின் நாட்களில் நான் எனது ஆலயத்தில் ஒரு ஜெபக்குழு ஆரம்பித்தேன். அதை வெகுநாட்களாக தொடர முடியவில்லை. என் கல்லூரி நாட்களில் சுரண்டையில் நடந்த ஒரு வாலிபர் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அதன் பிறகு மாதந்தோறும் நடைபெறும் சினெர்ஜியா கூடுகைக்கு போன் செய்து அழைப்பார்கள். போக வேண்டுமென்று நினைப்பேன் ஆனால் ஒரு வருடத்திற்கும் மேல் கலந்து கொள்ள தடையாகவே இருந்தது. கல்லூரியின் இறுதி ஆண்டிலிருந்து சினெர்ஜியா கூடுகைகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தேன். அங்கு Volunteerஆக உதவி செய்ய ஆரம்பித்தேன். பாடல் பாடுவேன், மற்ற வேலைகளையும் செய்வேன். நாலுமாவடியில் நடந்த ஒரு வாலிபர் கொண்டாட்டத்தின் மூலமாக முதன்முறையாக நற்செய்தி சொல்ல ஆரம்பித்தேன். வேலை முடிந்து பேருந்தில் ஏறும்பொழுது நண்பர்களுடன் அமராமல், ஆண்டவர் உணர்த்தும் இடத்தில் உட்காருவேன். ஆண்டவர் சரியான ஆத்துமாக்களை அழைத்து வருவார். அவர்களுக்கு இயேசுவின் அன்பை சொல்வேன். என் பையில் எப்போதும் கைப்பிரதி வைத்திருப்பேன், அதை யாருக்கு கொடுக்க ஏவுகிறாரோ அவர்களுக்குக் கொடுப்பேன். அந்த நேரத்தில் பல பாவ சோதனைகள் ஏற்பட்டு, ஜெப வாழ்க்கையை இழந்தேன். அந்த நேரத்தில் தான் எழுப்புதலை பற்ற வைப்போர் முகாமில் கலந்து கொண்டேன். அது எனக்கு திருப்புமுனையாக அமைந்தது. அங்கு மோகன் அங்கிள் மூலமாக ''ஆண்டவர் உங்களை நம்புகிறார்'' என்ற வார்த்தை என்னைத் தொட்டது, இயேசுவுக்கு என்னை ஒப்புக் கொடுத்தேன். பின்னர் எனது கிராமத்திலிருந்து முகாமில் கலந்து கொண்ட இரண்டு சகோதரிகளுடன் சேர்ந்து ஜெபக்குழு ஆரம்பித்து ஜெபித்தோம். 10 முதல் 15 நபர்கள் சேர்ந்து வாரந்தோறும் மாலை வேளைகளில் தேசத்திற்காக ஜெபிப்போம். பின்னர் 2021ம் வருடம் ஜெபமலையில் நடந்த பின்தொடர் கூடுகை மூலமாக வி.கே.புதூர் தாலுகாவில் இரண்டு ஜெபக்குழு ஆரம்பித்து ஜெபிக்கிறோம். மூன்று ஜெபக்குழுவை நடத்த தேவன் கிருபை செய்து வருகிறார்.



**சரி... ஜெபக்குழுவில் ஜெபிக்கிறீர்கள்... தற்போது உங்களுக்கும் இயேசுவுக்கும் உள்ள உறவு எப்படி இருக்கிறது?**

2022 ஆரம்பத்தில், எனக்கு ஒரு தரிசனத்தில். ஒரு வயல் நிலத்தை நான் கடந்து போனேன். அதில் நெற்பயிர்கள் விளைந்து முதிர்ந்து உபயோகிக்கக் கூடாதபடி பழுத்துக் கிடந்தது போலவும் பார்த்தேன். ஆனால் அந்தத் தரிசனத்தை அசட்டை பண்ணினேன். ஆண்டவர் பல வசனங்களின் மூலம் என்னோடு இடைபட்டார். அவர் வார்த்தைக்கு கீழ்ப்படியாததால் அவர் பிரசன்னத்தை இழக்க ஆரம்பித்தேன். அதன்பின் வைராக்கியத்தோடு முதலாவது கைப்பிரதி ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். ஒவ்வொரு மாதமும் 2 முறையாவது கிராம ஊழியத்திற்கு செல்ல வேண்டும் என்று முயற்சிப்பேன். கிராம ஊழியத்திற்கு சென்று கைப்பிரதி கொடுக்கும் போது அவர்களின் பாரங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். அது எனக்கு ஜெபிப்பதற்கு பிரயோஜனமாக இருக்கும்.

இப்போது ஆண்டவர் என்னோடு இடைபடுவதையும், பேசுவதையும் நன்றாக உணர முடிகிறது. நான் காத்திருந்து ஜெபிக்கும் போது தேசத்தின் சில காரியங்களை தரிசனங்களின் மூலம் வெளிப்படுத்தி ஜெபிக்க வைப்பார். வேதத்தை தியானிக்கும் போது அநேக சத்தியங்களை கற்றுத் தருவார். நான் தவறாக ஏதாவது செய்தால் என்னை கடிந்து கொள்வார். ஆவிக்குரிய வாழ்வில் பெலவீனம், சோர்வு, போராட்டங்கள் வரும் போது விட்டுக் கொடுக்கவே மாட்டார். அவர் வார்த்தைகளினால் என்னை உற்சாகப்படுத்தி என் மூலம் செய்ய நினைப்பதை செய்து கொண்டே இருக்கிறார். குறிப்பாக சுவிஷேசம், ஜெபம் என்னும் இரண்டிலும் என்னை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.



**சரி... உங்களை சோதனையை மேற்கொள்ள வைத்தார்... இன்றைய வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பல நேரங்களில் நம் திட்டங்களைவிட அவருடைய திட்டங்கள் சிறப்பானதாகவே இருக்கும். ஆரம்பத்தில் நம்மால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் முடிவில் அது சிறப்பானதாகவே இருக்கும். நான் விரும்பிய ஹாஸ்டல் வாழ்க்கை கிடைத்திருந்தால் நான் எப்படி இருந்திருப்பேனோ தெரியவில்லை. ஆனால் என் வாழ்வில் அவருடைய விருப்பம் நிறைவேறும் போது அநேகருக்கு பிரயோஜனமான பாத்திரமாக ஆண்டவர் என்னை பயன்படுத்துகிறார். நான் இரட்சிக்கப்பட்ட நாளில் ஆண்டவரிடம் சொன்னது, ''நான் உங்களை விட்டாலும் நீங்கள் என்னை விட்டு விடாதீங்கள்'' என்று என் கரங்களை அவர் சித்தத்திற்கு முழுவதுமாய் ஒப்புக்கொடுத்தேன். நீங்களும் ஊழிய பாதையில் ஆண்டவருக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வைராக்கியத்தோடு, வாஞ்சையோடு உங்களை ஒப்புக்கொடுத்தால் ஆண்டவர் நிச்சயம் உங்களை பலப்படுத்தி பயன்படுத்துவார்.

**அன்பான வாலிபர்களே! சகோதரி அன்ன ரோஸ்லின் அவர்கள் அடிக்கடி விழுந்து, விழுந்து எழும்பினாலும், கர்த்தர் அவர்களோடு இருந்ததினால் கரம்பிடித்து நடத்தி இன்று அநேகருக்கு ஊழியம் செய்யவும் பயன்படுத்தி வருகிறார். நீங்களும் ஆண்டவரிடம் கரத்தை பிடிக்க சொல்லும் போது, அவர் உங்கள் கரத்தையும் பிடித்து நடத்துவார். உங்களையும் சோதனைகளை மேற்கொள்ள வைத்து அவர் சிறகின் கீழ் வைத்து பாதுகாப்பார்!** ●

# கன்மலையாகிய கர்த்தர் நமக்கு பாதுகாப்பு!

'புள்ளிகலவாய்' (Epinephelus tauvina) என்கிற மீன் வகை, எதிரிகளிடமிருந்து தப்பிப்பதில் புத்திசாலி. கடலுக்கு அடியில் பாறைகளுக்கு நடுவே போய் படுத்துக் கொள்ளுமாம். பாறைக்கும் இந்த மீனுக்கும் லென்ஸ் வைத்து பார்த்தால் கூட வித்தியாசத்தைக் கண்டு பிடிக்கவே முடியாது. எதிரி ஏமாற்றத்தோடு திரும்பிச்செல்லும்! இது கடலில் அடிக்கடி நடக்கிற நிகழ்வு. அந்த மீனும் தவறாமல் பாறைகளுக்கு நடுவே ஓடி, இன்றுவரை தப்பித்துக்கொண்டு தான் இருக்கிறது!



அதுபோலவே தம்முடைய மகிமை கூட மோசேக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்று பாதுகாப்பு கொடுத்தார் நம் தேவன்! தம்முடைய பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்து மிகுந்த கரிசனை உள்ளவர். கன்மலையாகிய அவர் தம்மையே நமக்கு பாதுகாப்பும் அரணாக வைக்கிறார். நமக்கு போராட்டங்கள் வரும்போதெல்லாம், பிரச்சனைகள் எதிராக நிற்கும் போதெல்லாம் நாம் மறைந்துகொள்ள வேண்டிய இடம் அவரது சமூகமே!

என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்; (யாத்திராகமம் 33:22)




ஆலோசனை: அலி

நான் கல்லூரி இறுதி (மூன்றாவது) ஆண்டு படிக்கிறேன். நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து இரட்சிக்கப்பட்டு ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்ந்து வந்தேன். ஊரடங்கு நாட்களில் மொபைல்போன் அதிகமாக பயன்படுத்த ஆரம்பித்து ஒரு நாளைக்கு 5 முதல் 6 மணி நேரம் வரை இச்சையானப் படங்களைப் பார்க்க ஆரம்பித்தேன். அதுதான் எனது பொழுதுபோக்காக இருந்தது. இப்பொழுது கல்லூரிக்கு சென்ற பின்பும் அதை என்னால் விட முடியவில்லை. பார்த்து முடித்த பின்பு எனக்குள் குற்றவுணர்வு உண்டாகிறது. ஒவ்வொருநாளும் எனக்குள் செத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய வேதனை சொல்ல வார்த்தையே இல்லை. நான் மிக பெரிய பாவம் செய்கிறாய் என்று யாரோ சொல்வது போல தோன்றுகிறது. ஆமாம்! நான் செய்வது பாவம் என்று தெரிகிறது. ஆனால் என்னால் அதை மேற்கொள்ள முடியவில்லை. இதன் விளைவாக என்னுடைய படிப்பும் பாதிக்கின்றது. என் பாடங்களையும் ஒழுங்காக படிக்க முடியவில்லை. இந்தப் பாவத்திலிருந்து வெளி வர முடியுமா? எனக்கு இயேசு விடுதலை கொடுப்பாரா? – சங்கர், கன்னியாகுமரி.

அன்பு தம்பி சங்கர்! உங்களது உள்ளான வேதனை நன்கு புரிகிறது. இரட்சிக்கப்பட்ட நீங்கள் பாவம் செய்து தேவனை துக்கப்படுத்துவதும், அதினால் உண்டாகும் குற்ற மனசாட்சியில் அனுதினமும் வேதனை அனுபவிப்பதையும் என்னால் உணர முடிகிறது.

சங்கர்! எப்பொழுது ஒரு பாவத்திலிருந்து வெளிவர விரும்புகிறோமோ, அப்பொழுது அதற்கான வழிகளை தேவன் திறக்கிறார். உங்களுடைய அடிமைத்தனத்திலிருந்து வெளிவர நீங்கள் விரும்பினால் போதும், உங்களை உங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, விடுதலையோடு வாழவும், வெற்றியுள்ள வாழ்க்கையை தொடரவும் உதவி செய்வார்.



சங்கர்! அநேக நேரம் நாம், நம்மை அறியாமலேயே சாத்தான் நமக்கு விரிக்கும் கண்ணியில் விழுந்து விடுகிறோம். ''திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்...'' (யோவான் 10:10) என்று வேதம் சொல்கிறது. அவன் நம் வாழ்க்கையில் என்ன திருடுவது, என்ன கொல்வது, என்ன அழிப்பது என்பதை நன்கு அறிய வேண்டும். அப்பொழுது தான் நம்மால் விழிப்புடன் இருக்க முடியும்.

- முதலாவதாக, நம்முடைய வாழ்க்கையில் அவன் திருடுவது, நம்முடைய பரிசுத்தம், வாலிபர்களுடைய பெலனே அவர்கள் பரிசுத்தம் தான். சாத்தான் அதை திருடுவதால் அவர்களுக்குள் குற்றமன சாட்சியும், சோர்வும் வருகிறது.

- இரண்டாவதாக, அவன் கொல்வது (கொலை செய்துவது). தேவன் அவர்களுக்கு வைத்திருக்கும் அழகான திட்டத்தைக் கொடுத்து, அந்த திட்டத்தின் பாதையிலிருந்து அவர்களை திசை திருப்பி, அழிவின் பாதைக்கு நேராக அல்லது தவறான பாதைக்கு நேராக வழிநடத்த ஆரம்பிப்பான்.

- மூன்றாவது, நம்மை பாவம் செய்ய வைத்து, குற்ற மனசாட்சியில் தள்ளி, நாம் தேவனுடைய பிள்ளை இல்லை என்று ஒரு பொய்யைச் சொல்லி, நாம் வாழவே தகுதி இல்லாதவர்கள் என்று சொல்லி நம் உயிரை நாமே மாய்த்துக் கொள்ள தூண்டுவான். இறுதியில் அவன் அழிக்க துடிப்பது நம் ஆத்துமாவை தான்.

பரலோகத்திற்கு பாத்திரமான நம்மை, அகால பாதாளத்திற்கு அனுப்ப எத்தனிப்பதே அவன் அவனது குறிக்கோள். இப்படி நம்மிடம் திருடுவதும், கொல்வதும், அழிப்பதும் அவன் வேலை. ஆனால், ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்'' (1 பேதுரு 5:8) என்று வேதம் சொல்கிறது. எனவே சங்கர் இந்த உண்மை அறிந்த நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கும்

போது எதிரியின் ஏவுகணைகளை எளிதில் அறிந்து அவைகளை தவிடு பொடியாக்க நம்மால் முடியும்.



அவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போன்றவன். ஆனால் நமக்குள் இருப்பவரும், நம்மோடு இருப்பவரும் ''யூத கோத்திரத்து சிங்கம்''. அவருடைய கெர்ச்சனைக்கு முன்பாக சத்துரு எம்மாத்திரம்! அவன் திட்டமும், கண்ணிகளும் எம்மாத்திரம்! எனவே சங்கர் இந்த பாவத்திலிருந்து இயேசு உங்களுக்கு விடுதலை தரவும், இந்த அடிமைத்தனத்திலிருந்து நிரந்தர விடுதலைக் கொடுத்து வெற்றியுள்ள வாழ்க்கை வாழ உதவி செய்து, உங்கள் தோல்வியை ஜெயமாக மாற்ற வல்லவர்.

**நீங்கள் செய்ய வேண்டியது:** ஆண்டவரே நான் செய்த பாவத்தை மன்னியும் என்று உண்மையான இருதயத்தோடு கேட்டால், அவர் உங்கள் பாவங்களை மன்னித்து உங்களுக்கு விடுதலை தருவார். அதே நேரம் நீங்கள் இந்தப் பாவத்தை மறுபடியும் செய்யாமல் உங்களை காத்துக் கொள்ள சில செயல்களை பின்பற்ற வேண்டும்.

## பின்பற்ற வேண்டிய விஷயங்கள்...

- இரவு 9:30 மணிக்கு மேல் மொபைல்போன் பயன்படுத்துவதை கண்டிப்பாக தவிர்க்கவும்.

- Internet Usage மற்ற நேரங்களிலும் தவிர்ப்பது நல்லது.




- Smart Phoneயில் Well being என்ற Option பயன்படுத்தி ஒரு நாளைக்கு Youtube, Instagram, Facebook போன்ற Appயை பயன்படுத்தி குறிப்பிட்ட நேரத்தை fix பண்ணும் போது, குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு அந்த Appயை உங்களால் பயன்படுத்த முடியாது. இப்படி உங்களை நீங்களே கட்டுப்படுத்தவும் காத்துக் கொள்ளவும் முயற்சி செய்யுங்கள்.

- எப்பொழுது எல்லாம் மொபைலை தொட ஆசை வருகிறதோ அப்பொழுது உங்களை கவனத்தை திசை திருப்ப வேறு Physical Activityயில் ஈடுபடலாம்.

- உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலப்படும் போது, இப்படிப்பட்ட இணையதளம் சிக்கல்களில் மாட்டாமல் இருக்க, உங்கள் ஜெபத்தையும், வேத வாசிப்பையும் அதிகமாக்க முயற்சி செய்யுங்கள்.

- ஒரு போதும் வேதத்தை மொபைல்போனில் வாசிக்க வேண்டாம். Youtubeயில் தேவ செய்திகளை கேட்பதைக்கூட சில நாட்களுக்கு தவிர்க்கவும். காரணம் Message கேட்டு முடித்த பிறகு உங்களையும் அறியாமல் வேறு சில காரியங்களை பார்க்க செல்ல வாய்ப்பு உண்டு.




- ஒரு வேளை மொபைலைத் தவிர்க்க முடிய வில்லை என்றால், Normal Nokia Button மொபைலுக்கு மாறுவது மிக நல்லது. உங்கள் கண் பாவம் செய்தால் உங்கள் சரீரம் முழுவதும் இருளாய் இருக்கும் என்று வேதம் சொல்கிறது. பாவம் செய்து இரண்டு கண்களோடு நரகம் போவதை விட, ஒரு கண்ணோடு பரலோகம் போகலாமே!

யோவான் 5ம் அதிகாரத்தில், 38 வருஷமாய் வியாதியாய் இருந்த நபரை சுகப்படுத்தி விட்டு, மறுபடியும் இயேசு அவனைப் பார்த்து சொன்ன காரியம், ''அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார். தேவன் இந்த பாவத்திலிருந்து உங்களுக்கு விடுதலை கொடுத்த பிறகு, நீங்கள் கவனமாகவும், பொறுப்பாகவும் கவனமாயும், பொருட்போடும் செயல்படும் போது இந்தப் பாவத்தை மேற்கொள்ளலாம். அதே நேரம் உங்களைப் போன்ற பாவத்தில் சிக்கிய பல வாலிபர்களுக்கு உதவி செய்யும் ஒரு ஆவிக்குரிய ஆலோசகராக நீங்கள் மாறலாம், ஜெபித்து செயல்படுங்கள்! ●

**வாலிப பருவம் சிறகடித்து பறக்க தோணும்,
விழிப்புடன் இல்லையென்றால்
சிறைபட்டு போவாய்!**

# பாதுகாப்பவர்!

முகப்பு செய்தி: சதீஷ்



*இன்றைய நவீன உலகத்தில் வீட்டை விட்டு வெளியே வந்து பாதுகாப்புடன் வீடு திரும்புவோம் என்று யாரும் அவ்வளவு எளிதில் உத்தரவாதம் தர முடியாது. ஏனெனில் ஒவ்வொருநாளும் மனுகுலத்தை குறிவைத்து பல ஆபத்துகள் வந்துக் கொண்டே இருக்கின்றன. ஒரு பக்கம் கொள்ளை நோய்கள், இன்னொரு பக்கம் விபத்துகள், கொலைகள் என சொல்லிக் கொண்டே போகலாம். உலகளவில் சாலை விபத்துகளில் அதிக பேர் உயிரிழக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. நம் தேசத்தில் ஒரு ஆண்டுக்கு 4 லட்சத்திற்கும் அதிகமான சாலை விபத்துகள் ஏற்படுவதாக மத்திய அரசு தெரிவிக்கிறது. இப்படி நம்மைச் சுற்றி பாதுகாப்பற்ற சூழ்நிலைகள் இருந்த போதிலும், நமக்கு பாதுகாப்பு அளிக்கிற ஆண்டவர் நம்மோடு இருந்து, நம்மை பாதுகாக்கும் தேவனாக இருக்கிறார். தேவன் ஆபிரகாமுக்கு சொன்னார், "...நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்" (ஆதி. 15:1). ஆண்டவர் ஆபிரகாமை அழைத்தவராக மாத்திரமல்ல, கிட்டத்தட்ட 170 ஆண்டுகள் அவரைப் பாதுகாக்கிறவராக இருந்தார்.*

ஆண்டவர் தமது பிள்ளைகளை எப்பொழுதும் பாதுகாக்கிறவராகவே இருக்கிறார். தம்மை நம்பி இருக்கிறவர்களை அவர் ஒருபோதும் கைவிடுவதில்லை. எத்தனை ஆபத்துகள் வந்தாலும் நம்முடன் இருந்து நம்மை பாதுகாக்கிற கர்த்தர் அவர். சாது சுந்தர்சிங் அவர்கள் பஞ்சாப், நேபாளம், திபெத் ஆகிய பகுதியில் ஊழியம் செய்யும் நாட்களில் ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் விரட்டி விடுவார்களாம். மக்களால் விரட்டி அடிக்கப்பட்ட அவர் மலைகளிலும், குன்றுகளிலும்தான் தங்கி இருப்பார். ஒருநாள் காலையில் சிறுத்தை ஒன்று



தான் தங்கியிருந்த குகையில் தனக்கு சமீபத்தில் உறங்கிக் கொண்டு இருப்பதைப் பார்த்து, எந்த சலசலப்பும் இல்லாமல் அவர் எழுந்து போனாராம். ஏதோ ஒன்று இருப்பதுபோல் உணர்ந்த அவர், எழும்பி நிற்கும் போது ஒரு பெரிய பாம்பு நகர்ந்து சென்றதை பார்த்தாராம். இப்படி ஆண்டவரை நம்பி மலைகளிலும், குகைகளிலும் படுத்திருந்த சாது சுந்தர்சிங் அவர்களை கர்த்தர் சிறுத்தையின் வாய்க்கும், பாம்பின் பல்லுக்கும் அவரைத் தப்புவித்து பாதுகாத்தார். கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா கொள்ளை நோயினால் எத்தனையோ பேர் பாதிக்கப்பட்டு ஜீவனை இழந்த போதிலும்,



''உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது'' (சங்கீதம் 91:7) என்ற வாக்கின்படி, ஆண்டவர் உங்களையும் என்னையும் கண் இமை காப்பது போல பாதுகாத்தார்.

உங்களுடைய வாழ்க்கையில் பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எழும்பி எத்தனை முறை உங்களை பாவத்திலும், மனிதர்களின் சூழ்ச்சியிலும், நய வஞ்சகத்திலும் விழ வைக்க முயற்சி செய்தாலும், நீங்கள் பயப்படாமல் இருங்கள். சிங்கங்களின் வாய்களுக்கு தானியேலை தப்புவித்த ஆண்டவர் உங்களையும் எல்லா தீங்குக்கும் விலக்கி பாதுகாப்பார். சிங்கங்கள் மற்ற மிருகங்களை வேட்டையாடி தின்னும் குணம் படைத்தவை. அவைகள் பசித்திருக்கும் போது மற்ற விலங்குகள் தன் எல்லைக்குள் வரும்படி அமைதியாய் இருந்து வேடிக்கை பார்க்குமாம். இரையாகும் மிருகங்கள் தன் எல்லைக்குள் இருக்கும் போது கெர்ச்சித்து அவைகளை பயமுறுத்த ஆரம்பிக்குமாம். பயந்திருக்கும் விலங்குகளை வேட்டையாட மற்ற சிங்கங்களின் உதவியை நாடி தன் திட்டத்தை நிறைவேற்றுமாம். இப்படிப்பட்ட குணம் கொண்ட சிங்கக் கெபியில் தானியேல் போடப்பட்ட போது சிங்கங்கள் அவனைக் கண்டு கெர்ச்சித்து பயமுறுத்தவும் இல்லை, அவனை அழிக்க மற்ற சிங்கங்களை உதவிக்கு கூப்பிடவும் இல்லை. என்ன காரணம் என்று தானே யோசிக்கிறீர்கள்? ஆண்டவர் தானியேலை பாதுகாக்க, ''சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்;...'' (தானி. 6:22).



உங்களுக்கு விரோதமாக சாத்தான் எத்தனை பேரை எழுப்பினாலும் சரி, நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். தானியேலை ஆண்டவர் பாதுகாக்க காரணம், ''...அவன் தன் தேவன்பேரில் விசுவாசித்திருந்தபடியால், அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை'' (தானி. 6:23). நீங்களும் தானியேலைப் போல, ''என்னை அழிக்கும்படி எத்தனை பேர் எழும்பினாலும் சரி, என்னை பாதுகாக்கிற ஆண்டவர் என்னோடு இருக்கிறார்'' என்று விசுவாசத்துடன் இருக்கும்பொழுது உங்களுக்கு எந்த சேதாரமும் வராது என்பதை நிச்சயமாக சொல்ல முடியும். உங்களை பாதுகாக்கிற ஆண்டவர் உங்களுடனே இருக்கிறார் என்பதை விசுவாசியுங்கள். அப்பொழுது நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள். உங்களுக்கு விசுவாசம் பெருக வேண்டுமானால் அனுதினமும் தேவனை நோக்கி ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஜெபிக்க கூடாது என சட்டமே வந்த போதும் தானியேல் வழக்கத்தின்படி மூன்று வேளையும் தன் தேவனை நோக்கி ஜெபிக்கிறவராக இருந்தார். இந்த ஜெபம் தான் அவருக்குள் விசுவாசத்தை பெருக செய்தது. அந்த விசுவாசமே அவரைப் பாதுகாத்தது. நீங்கள் ஒவ்வொரு நாளும் இந்த உலகத்திற்குள் போவதற்கு முன்பு அதிகாலையில் தேவ சமூகத்திற்கு சென்று ஜெபம் செய்து விட்டு போகும் போது, உங்களுக்கு விரோதமாக என்ன நேர்ந்தாலும், ''இயேசு என்னை பாதுகாப்பார்'' என்ற விசுவாசம் உங்களுக்குள் பெருகும்.



*எனக்கன்பான வாலிபர்களே! போட்டிகளும், பொறாமைகளும், ஆபத்துகளும் நிறைந்த இந்த உலகத்தில் இயேசுவால் மட்டுமே உங்களை பாதுகாக்க முடியும் என்று விசுவாசியுங்கள். ஏனெனில் "...தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்" (சங்கீதம் 18:30). நீங்கள் எப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலையில் இருந்தாலும் சரி, நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான் ஆண்டவரே, நீரே என் அடைக்கலம், என் கோட்டை, என் தஞ்சம் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்பி இருக்கும் போது நீங்கள் அவரால் பாதுகாக்கப்படுவீர்கள்!* ●





செய்தி: மோகன் சி. லாசரஸ்

# தயவு...

ஆதி. 50ம் அதிகாரத்தில், யோசேப்பைக் குறித்து வாசிக்கிறோம். யோசேப்பு 17 வயது வாலிபனாக இருந்த போது ஒரு சொப்பனம் கண்டார். அதை தகப்பனிடம் மகிழ்ச்சியாக சொன்னார். இதனால் தன் சொந்த சகோதரர்கள் அவனைப் பகைத்து, கொலை செய்ய முயற்சி செய்து, பிறகு அவனை அடிமையாக விற்றுப் போட்டார்கள். அடிமையாக எகிப்து தேசத்திற்கு வந்த யோசேப்பின் மீது அபாண்டமான பழிகள் சுமத்தப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார். கிட்டத்தட்ட 13 வருடங்கள் யோசேப்பு வேதனையோடு இருந்தார். இதற்கெல்லாம் காரணம் தன்னுடைய சகோதரர்கள் தான். இந்த வேதனை, பாடுகளுக்கு பின்பு எகிப்து தேசத்திற்கே உயர்ந்த அதிகாரியாக யோசேப்பை கர்த்தர் உயர்த்தினார். பார்வோன் என்கிற இராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் யோசேப்பு உயர்த்தப்பட்டு விட்டார். இப்போது, பஞ்ச காலத்தில் எகிப்தில் மட்டும் தான் உணவு தானியங்கள் இருக்கிறது. அதை வாங்குவதற்கு யோசேப்பின் சகோதரர்கள் வருகிறார்கள். அப்போது, யோசேப்பு அதிகாரியாக இருப்பதைக் கண்டார்கள். அந்த சமயத்தில் அவருடைய தகப்பனார் உயிரோடு இருந்தார். கொஞ்ச நாட்களில் தகப்பனாரும் மரித்து விட்டார். அப்பொழுது அவன் சகோதரர்கள், ''நாம் அவனுக்கு அநேக தீமைகள் செய்தோம், இன்றைக்கு அவன் அதிகாரியாக இருக்கிறான், அதனால் நம்மை பழி வாங்கி விடுவானோ'' என்று பயந்தார்கள்.



அப்போது ''யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்'' ஆதி. 50:19-21. நாமும் அப்படி இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். உங்களுக்கு தீங்கு செய்தவர்கள், உங்களை அபாண்டமாக பழி சுமத்தினவர்கள், உங்கள் வீட்டில் நடக்கிற நல்ல காரியத்தைத் தடுக்கிறவர்கள், பதவி உயர்வை தடுக்கிறவர்களிடம் போய் நீங்கள் அன்பாக

பேச வேண்டும். நம்மால் அப்படி நடக்க முடிகிறதா? ஆனால், யோசேப்பைப் பாருங்கள், எதற்கு பயப்படுகிறீர்கள், நான் இருக்கிறேன், உங்கள் பிள்ளைகளை நான் பராமரிப்பேன் என்று அவர்களோடே அன்பாக பட்சமாய்ப் பேசினான். நமக்குள் அந்த சுபாவம் இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும்.



இந்த சுபாவம் நமக்குள் இல்லாததினால் தான் வீட்டிற்குள் சமாதானக் குறைவுகள், சண்டைகள், பிரச்சனைகள், நிம்மதியில்லாத சூழ்நிலைகள், பகைகள் காணப்படுகிறது. சில நேரங்களில் இரக்கமாக பேச வேண்டும் என்பதை மறந்து, கோபமாக பேசி விடுவோம். பிறகு, ஆண்டவரிடம் போய் என்னை மன்னியும், நான் இப்படி பேசியிருக்கக்கூடாது, நடந்திருக்கக் கூடாது, நான் கனிவாக, இரக்கமாக பேச வேண்டும் எனக்கு கிருபை தாரும், எனக்கு அந்த சுபாவத்தைத் தாரும் என்று ஜெபிக்கிறோம். சிலர் தயவு செய்து மன்னித்து விடுங்கள், தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூறுவார்கள். தயவு செய்து அப்படி என்று சொல்கிறவர்களுக்கு தயவு காட்ட வேண்டும்.

ஒரு குடும்பத்தார் நிறைய நிலங்கள், சொத்துக்களோடு நன்றாக வசதியாக வாழ்ந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகன் இருந்தான். இந்த சொத்துக்களை அபகரிப்பதற்காக சொந்தக்காரர்கள் பெற்றோரைக் கொலை செய்து விட்டு சொத்தை அபகரித்துக் கொண்டார்கள். இந்த குழந்தை அனாதையாக்கப்பட்டு விட்டது. அந்த மகனை சொந்தக்காரர்கள் அனாதை விடுதியில் சேர்த்து விட்டார்கள். தாய், தகப்பன் இல்லாமல் அனாதை விடுதியில் அந்த மகன் வளர்ந்தான். விவரம் தெரிகிற வயது வந்த போது, அந்த ஊரிலிருந்த ஒருவர் வந்து, உன் அப்பா, அம்மாவை கொலை செய்து சொத்துக்களை அபகரித்துக் கொண்டார்கள், நீ அனாதையாக காரணம் அவர்கள் தான் என்று சொன்னார். அந்த மகனுக்குள் ஒரு வெறித்தனம் உண்டானது. அவன் வாழ்க்கையில் ஒரு தீர்மானம் எடுத்தான். என் அப்பா, அம்மாவை கொன்று, சொத்துக்களை அபகரித்துக் கொண்டவர்களை நான் பழிக்குப் பழி வாங்குவேன் என்று கொலை வெறியோடு இருந்தான். வாலிபனாக வளர்ந்த போது, ஒரு பெரிய கத்தியை வைத்துக் கொண்டு என் பெற்றோரைக் கொன்றவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை கண்டுபிடித்து கொன்று விட வேண்டும் என்று அவர்களைத் தேடிக் கொண்டே இருந்தான். அந்த சமயத்தில் ஒருநாள் இயேசுவைப் பற்றி அவனுக்கு சொல்லப்பட்டது. இயேசுவுக்கு தன்னுடைய உள்ளத்தில் இடம் கொடுத்தவுடனே, கடினமான இருதயம் மென்மையாக மாறி விட்டது. அவனுக்குள் ஒரு மாற்றம் வந்து விட்டது. இப்போது, இயேசுவுக்காக ஒப்புக்கொடுத்து வாழ ஆரம்பித்து விட்டார். சில வருடங்கள் கடந்தது. ஒருவர் வந்து உன் அப்பா, அம்மாவை கொன்றவர்கள் அங்கே இருக்கிறார்கள் நான் பார்த்தேன் என்று சொன்னவுடனே, ஏன் என் அப்பா, அம்மாவை கொன்றீர்கள் என்று ஒரு கேள்வியாவது கேட்க வேண்டும் என்று புறப்பட்டு போனார். அங்கு போய் பார்த்தால் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் அவர்கள் இருந்தார்கள். அவர்களை பார்த்ததும் என் அப்பா, அம்மாவை கொன்று விட்டார்களே என்று அவருக்கு கோபம் வரவில்லை. அவர்களை பார்த்தவுடன் இரக்கம் வந்தது. உடனே கடைக்கு சென்று, அவர்களுக்கு உடை, சாப்பாடு, பழங்கள் என்று தேவையானவற்றை வாங்கிக் கொண்டு அவர்கள் வீட்டிற்கு போனார். நீங்கள் யார் தம்பி என்று கேட்ட போது, நான் உங்களை பார்க்க வந்தேன், நம்ம ஊர் தான், உங்களுக்கு கொஞ்சம் உடைகள், பழங்கள் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னார். நீங்கள் யார் தம்பி எனக்கு தெரியவில்லையே, நம்ம ஊர் என்றால் யார் என்று எனக்கு தெரியவில்லையே என்று கேட்டார். அவனுடைய அப்பா, அம்மா பெயரை சொன்னவுடன் அவர்கள் அப்படியே அதிர்ச்சியாகி விட்டார்கள். என்னைத் தெரியுமா என்று கேட்டார். தெரியும், உங்களைத் தேடிக் கொண்டே இருந்தேன், நீங்கள் இங்கே இருக்கிறதாக சொன்னார்கள், அதனால் உங்களைத் தேடி வந்தேன். நான் உங்களை கொலை செய்ய வேண்டும், பழி வாங்க வேண்டும் என்று இருந்தேன். இயேசு ஒருநாள் என்னை



சந்தித்தார். என் கடினமான உள்ளத்தை மென்மையாக மாற்றி விட்டார். எனவே நீங்கள் கஷ்டத்தில் இருக்கிறதை பார்த்தவுடன் எனக்குள் இரக்கம் உண்டானது. அதனால் உங்களுக்கு உடைகள், பழங்கள் வாங்கிக் கொண்டு வந்தேன். நடந்ததெல்லாம் மறந்து விடுங்கள், இந்த இயேசு என் வாழ்க்கையை மாற்றினார், நீங்கள் அவரை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் சந்தோஷமாக இருக்கலாம் என்று சொன்னார்.



அவர் தான் FMPB-ஊழியத்தில் இருக்கும் நவநீதர் என்கிற ஊழியக்காரர். அவர்கள் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவம் அது. அவர்களுக்குள் அந்த தயவு, இரக்கம் வந்ததற்கு காரணம் இயேசு தான். மற்றவர்களுக்கு நான் தயவு காட்ட வேண்டும், மற்றவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும், இயேசுவின் இரக்க குணம் எனக்குள் வர வேண்டும் என்று நாமும் விரும்ப வேண்டும். இயேசு கிறிஸ்து எல்லாருக்கும் தயவு காண்பித்தாரே, அந்த குணம் எனக்கு வர வேண்டும் என்று கர்த்தரிடம் கேட்க வேண்டும். தயவு காட்டும் இருதயம் எனக்குள் வேண்டும் என்று சொல்லி கேளுங்கள். மற்றவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும் என்கிற இருதயம் வேண்டும் என்று கேளுங்கள் கர்த்தர் கொடுப்பார்.

**அன்பான வாலிபர்களே!**
**ஒருவேளை நீங்களும் கடினமானப் பாதையைக் கடந்து போய்க் கொண்டிருக்கலாம்.**
**சோர்ந்து போகாதீர்கள்...**
**மற்றவர்களுக்கு தயவு காட்டுங்கள்...**
**உங்களுடைய நீண்ட நாள் கனவு நிச்சயமாக நிறைவேறும்!** ●

## ‘தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம்’ – நவம்பர் 7

உலக புற்றுநோய் தினம் (World Cancer Day) ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 4ம் தேதி அனுசரிக்கப்படுகிறது புற்றுநோயை ஆரம்ப காலத்திலேயே கண்டறிந்து, குணப்படுத்துவதை வலியுறுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 7-ந் தேதி, நாடு முழுவதும் ‘தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம்’ அனுசரிக்கப்படுகிறது.இது உலகளாவிய முன்முயற்சியாகும். இது பல மில்லியன் கணக்கிலான உயிர்களை மரணத்திலிருந்து பாதுகாக்கின்றது. 1993 இல் நிறுவப்பட்ட சர்வதேச புற்றுநோய் கட்டுப்பாட்டு ஒன்றியம் (UICC) கடந்த 2000 ஆம் ஆண்டில் உலக புற்றுநோய் தினத்தை உருவாக்கியது. புற்றுநோய் பரவும் நோய் இல்லை. ஆனால், பரவும் என்று எண்ணி புற்றுநோயாளிகள் பலர் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இதனாலே மனவலிமை அற்று பல நோயாளிகள் நடைபிணமாக மாறிவிடுகின்றனர்.

2018ம் ஆண்டின் புள்ளிவிவரக் கணக்கின் அடிப்படையில் புற்றுநோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 9.5 மில்லியன். அதாவது, சராசரியாக நாள் ஒன்றுக்கு 26 ஆயிரம் பேர் புற்றுநோயால் மரணமடைகின்றனர்.நம் நாட்டில் தினசரியும் 1300 பேர் புற்றுநோயினால் மரணமடைகின்றனர். கடந்த 2018ஆம் ஆண்டு 11.50 லட்சம் நோயாளிகள் புதிதாக கண்டறியப்பட்டனர். நாடு முழுவதும் 22.50 லட்சம் பேர் புற்றுநோயுடன் வாழ்ந்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மார்பகப்புற்றுநோய், வாய் புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் பாதிப்புகள்தான் நம் நாட்டில் அதிகம் என்கிறது மருத்துவ உலகம். புற்றுநோயைப் பொறுத்தவரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய சிகிச்சை அளிப்பதன் மூலம்முற்றிலுமாக குணப்படுத்த முடியும்.இதற்கு, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டியது மிகவும் அவசியம். புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்களை முற்றிலுமாக கட்டுப்படுத்துவதன் மூலம், அடுத்த 10 ஆண்டுகளின் மனிதர்களின் சராசரி ஆயுளை 10 ஆண்டுகள் அதிகரிக்கலாம் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மோசமான உணவு பாரம்பரிய உணவுப்பழக்கத்தை நாம் இன்றைக்கு மறந்து விட்டோம். கண்டதை கண்ட நேரத்தில் சாப்பிட்டு நேரங்கெட்ட நேரத்தில் உறங்கி உடலின் வளர்ச்சிதை மாற்றத்தை நாம் மாற்றி வைத்து விட்டோம். மோசமான உணவுப் பழக்கம் நிச்சயமாகப் புற்றுநோய் அபயாத்தை அதிகரிக்கும் என்கின்றனர் மருத்துவர்கள்.

# வேதாகம புதையல் வேட்டை

**கீழே வேதாகமத்தில் முதன்முதலில் சில காரியங்களை செய்தவர்களைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையைக் கண்டறிந்து, வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1. முதன் முதலில் கழுதை மேய்த்தவன் யார்?
2. பிறக்கும் முன் பெயரிடப்பட்ட முதல் மனிதன் யார்?
3. முதன்முதலில் தசமபாகம் கொடுத்தவன் யார்?
4. முதன்முதலில் விருந்துப்பண்ணினவன் யார்?
5. இரண்டு பெண்களை விவாகம் பண்ணின முதல் மனிதன் யார்?
6. காணிக்கைப் பெட்டியை செய்த முதல் மனிதன் யார்?
7. தன் பிறந்த நாளை கொண்டாடி விருந்துப்பண்ணின முதல் மனிதன் யார்?
8. திருடிய முதல் பெண் யார்?
9. முதல் தேசம் எது?
10. முதலில் நிலம் வாங்கியவன் யார்?

கடந்த மாத வெற்றியாளர்

**சகோ. பிலிப்பு,**
பாண்டிச்சேரி

WINNER

அவர்களை வாழ்த்துகிறோம்.

## கடந்த மாத விடைகள்

1. பாகால் பிராசீம் (2 சாமு. 5:20)
2. சுக்கோத் (ஆதி. 33:17)
3. கிப்ரோத் அத்தாவா (எண். 11:34)
4. எந்நக்கோரி (நியா. 15:19)
5. சீகேம் (1 இராஜா. 12:25)
6. கீரியாத்செப்பேர் (யோசுவா 15:15)
7. கீரியாத் அர்பா (யோசுவா 14:15)
8. தபேரா (எண். 11:3)
9. நோத் (ஆதி. 4:16)
10. ஓப்பீர் (1 இராஜா. 22:48)

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

**15.11.2022**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

# வெற்றிக்கான ஒரு தேடல்

சாதனை: சுமா

**வெற்றி வாகை சூட தயாராகிக் கொண்டிருக்கும் அனைத்து இளம் சாதனையாளர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்! நாம் வெற்றியின் உயரத்திற்கு செல்ல வேண்டுமென்றால் முதலில் நாம் இருக்கும் நிலையிலிருந்து எழும்ப வேண்டும். பிறகு உங்கள் வெற்றிக்கு தடையாய் இருக்கும் எதிர்மறையான சூழ்நிலைகளை எதிர்த்து சிறகடித்து பறக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். எவ்வளவு தடைகள் வந்தாலும் தொடர்ந்து சிறகடிக்கும் நபரால் தான் வெற்றிக்கான உயர் இடத்தை அடைய முடியும். எனவே உங்களை சிறகடித்து பறக்க வைக்க ஒரு சாதனையாளரின் வாழ்க்கை இதோ உங்கள் முன்!!!**



## KOBE BRYANT

கோபே பிரையண்ட் (Kobe Bryant) 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம் தேதி அமெரிக்காவில் உள்ள பென்சில் வேனியாவில் பிறந்தார். பிரையண்டின் தந்தை மிகப் பிரபலமான முன்னாள் (NBA) கூடைப் பந்தாட்ட வீரர். பிரையண்டின் தந்தை ஓய்வு பெற்ற பிறகு தன் குடும்பத்துடன் இத்தாலிக்கு சென்றார். பிரையண்ட் தன்னுடைய மூன்றாம் வயதில் இருந்தே கூடைப்பந்தின் மேல் அளவு கடந்த ஆர்வம் உள்ளவராய் இருந்தார். ஆனால், அவர் உயரம் குறைவாக இருந்ததால் அவரால் பார்த்து இரசிக்க மட்டுமே முடிந்ததே தவிர, விளையாட முடியவில்லை. பிரையண்டின் இரண்டு சகோதரிகளும் கூடைப்பந்து மற்றும் கால்பந்து இரண்டிலும் தேறின வீரனாக பிரையண்டை மாற்றினார்கள்.



பிரையண்ட் வளர வளர கூடைப்பந்தாட்டத்தின் மீதுள்ள ஆர்வமும் திறமையும் கூடவே வளர தொடங்கியது. அவர் கூடைப்பந்தாட்டத்தின் மீது அளவு கடந்த ஆசை கொண்டிருந்தார். ஆசையை மட்டும் அவர் வளர்க் கவில்லை, கூடவே அதற்கான முயற்சிகளையும், பயிற்சிகளையும் மேற்கொள்ளத் தொடங்கினார். 1991ஆம் ஆண்டு மீண்டும் இவர்களது குடும்பம் பென்சில்வேனியாவிற்கு திரும் பியது. லாயா மெரியன் உயர்நிலைப் பள்ளியில் உள்ள கூடைப்பந்து அணியில் சேர்ந்தார். இவரது கடின உழைப்பின் காரணமாக நான்கு ஆண்டுகள் மாநில சாம்பியன்ஷிப்பிற்கு அழைத்துச் சென்றது. தீவிரமாக விளையாட தொடங்கினார். உயர்நிலைப் பள்ளியில் மிக அதிக SAT

(Scholastic Assessment Test) சேர முடிவு செய்தார். NABவில் சேர்வதே முதல் இலட்சியம் என்று கடின பயிற்சிகளை மேற்கொண்டார். இவரின் கடின பயிற்சியால் 1996ஆம் ஆண்டு NBAவில் ஒட்டுமொத்த அதிகாரிகளும் ஒரு மனதோடு பிரையண்டை சார்லோட் ஹார் னெட்ஸால் அணிக்கு தேர்ந் தெடுத்தனர். பின்னர் லாஸ் ஏஞ்சல்ஸ் லேக்கர்ஸ் நிறுவனத்திற்கு மாறினார்.

1998ஆம் ஆண்டு ஆல்-ஸ்டார் கேம் என்ற விருதை 19 வயதில் பெற்றார். NBA வரலாற்றிலேயே இளம் வயதில் இந்த விருதினைப் பெற்றது இவர் மட்டுமே. தொடர்ந்து கூடைப்பந்தாட்டத்தில் தன்னுடைய திறமையைக் காட்டிக் கொண்டே இருந்தார். 2008ஆம் ஆண்டு இவர் மிகவும் மதிப்புமிக்க வீரராக பெயரிடப்பட்டார். 2008 மற்றும் 2012ம் ஆண்டுகளில் U.S. ஒலிம்பிக் அணிகளில் விளையாடினார். விளையாடினது மட்டும் அல்லாமல், தொடர்ந்து தங்கப் பதக்கங்களையும் பெற்றார்.












2013ஆம் ஆண்டு பிரையண்ட் தசைநார் நோயால் பாதிக்கப்பட்டார். இதன் விளைவாக 2013-2014ஆம் ஆண்டு போட்டியில் விளையாடும் போது முழங்காலில் முறிவு ஏற்பட்டது. தொடர்ந்து விளையாட முயற்சிக்கும் போது பலத்த காயம் காரணமாக அவரால் விளையாட முடியவில்லை. இனி கூடைப்பந்து விளையாட முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டதன் பிறகு பிரையண்ட் தன்னுடைய ஓய்வை அறிக்கையிட்டார். 20 ஆண்டுகள் தன்னுடைய திறமை மற்றும் கடின உழைப்பைக் கொண்டு ஐந்து NAB பட்டங்களை வென்றார். பட்டங்களை மட்டும் அல்ல இரசிகர்கள் மனதையும் கவர்ந்தார்.

பிரையண்டின் பெரும் முயற்சியால் அனைத்து வீரர்களுடன் இணைந்து அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி பள்ளிகளுக்கு உதவினார். வருடந்தோறும் கூடைப்பந்து கோடைகால முகாமை நடத்தி வந்தார். எதிர்பாராதவிதமாக, 2020 ஆண்டு ஜனவரி 26ம் நாள் ஹெலிகாப்டர் விபத்தில் இறந்தார். இவர் சிறுவயதில் இருந்தே வைத்திருந்த விடாப்பிடியான ஆசை, இன்று அனைவரும் வியக்கும் கூடைப்பந்தாட்ட வீரராக மாற்றியது.

**இளம் வாலிபர்களே, இலக்கை அடைய வேண்டும் என்றால் ஆசை மட்டும் இருந்தால் போதாது. அதற்காக போராட வேண்டும். பல தியாகங்களை செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், தொடர்ந்து ஓட வேண்டும். இதை அனைத்தையும் செய்யும் போது ஒருநாள் உங்களால் வெற்றியின் உயரத்தை தொட முடியும். பறக்க தயாராகுங்கள், வெற்றியின் மணத்தை சுவாசிக்க!!!**

சிந்தனை சிதறல்: ஜாஸ்மின் ஜான்

## பவுலை மெலித்தா தீவில் விஷப்பாம்பிற்கு விலக்கி பாதுகாத்தார்...



பவுலும் அவனோடு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களும் இத்தாலியா தேசத்திற்கு கப்பல் யாத்திரை செய்த போது கடும் காற்று அவர்கள் மேல் மோதியது. மிகுந்த பெரும் மழையில் சிக்கிக் கொண்டார்கள் . தப்பி பிழைப்போம் என்ற நம்பிக்கை இழந்து போயிருந்தார்கள் (அப் 27) அந்த ஆபத்திலிருந்து தப்பி மெலித்தா தீவிற்கு வருகிறார்கள். அங்கு அவரை விஷப் பாம்பு கடிக்கிறது. ஏற்கனவே மிகப்பெரிய ஆபத்திலிருந்து தேவன் அவரை பாதுகாத்து வழி நடத்தி வந்ததை பார்த்தார். மெலித்தா தீவில் விரியன் பாம்பு கடித்த பின்பும் அவர் சூழ்நிலைகளைப் பார்க்கவில்லை பாம்பின் விஷத்தை பார்க்கவில்லை. தேவன் வாக்கு கொடுத்துள்ளார், எனவே விசுவாசத்தை விட்டு பின்வாங்கவில்லை. சுற்றி இருந்த மக்கள் விழுந்து சாவான் என்று எண்ணினார்கள். ஆனால் பவுல் மிகவும் சாதாரணமாக இருந்தார். அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கொண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்.* (அப் 28:1-6) அவரின் விசுவாசத்தின் உறுதி இரத்தத்தில் கலந்த விஷத்தின் வல்லமையை முறித்தது. அந்த விஷம் இரத்தத்தில் கிரியை செய்ய முடியவில்லை அப்படியே அழிக்கப்பட்டுவிட்டது

**அன்பான வாலிபர்களே! பவுல் அநேக பாடுகள், ஆபத்துகள், எதிர்ப்புகளை சந்தித்தார். அதில் எல்லாம் இயேசு அவரை பாதுகாத்தார். விஷப் பாம்பு அவரை கடித்தபோது மரித்து போவார் என்ற சூழ்நிலையிலும் கூட இயேசு அவரை பாதுகாத்தார். அதுபோல உங்களையும் தேவன் பாதுகாப்பார்!!**

## வனாந்திரத்தில் இஸ்ரவேல் ஜனங்களை பாதுகாத்தார்...



இஸ்ரவேல் மக்கள் கானானை நோக்கி பயணம் செய்யும் போது பார்வோன் அவர்களை விடாமல் துரத்திக் கொண்டு வந்தான். அப்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்குப் பின்னாக பார்வோன் வருகிறதைக் கண்டு பயந்தார்கள், 'பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்: அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்' (யாத்திராகமம் 14:10) பார்வோனின் சேனை இஸ்ரவேல் ஜனங்களை துரத்திக் கொண்டு வந்தாலும் கர்த்தரை நோக்கி மோசே கூப்பிட்டபோது 'இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்' (யாத்திராகமம் 14:13). 'கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்: நீங்கள் சும்மாயிருப்பீர்கள்' (யாத்திராகமம் 14:14) என்ற வாக்குத்தத்தங்களைக் கூறி தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை நெருக்கத்திலும் வழிநடத்தி பாதுகாத்து வந்தார். பார்வோனின் சேனை இஸ்ரவேல் ஜனங்களை துரத்திக்கொண்டு வரும்போது அந்த பார்வோனின் சேனை இஸ்ரவேலின் சேனையை நெருங்க முடியாதபடிக்கு மேக ஸ்தம்பமும் அக்னி ஸ்தம்பமும் ஆச்சரியமாய் தேவபிள்ளைகளை பாதுகாத்தது. 'பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்னிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை' (யாத்திராகமம் 13:22). இவ்விதமாய் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்காக யுத்தம் பண்ணி சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே தம்முடைய ஜனங்களை பாதுகாத்து வழிநடத்தினார். அதிசயமானவர் இன்றைக்கும் உங்களுக்கு நீங்கள் எதிர்பார்த்திராத அதிசயங்களைச் செய்வார். ஆகவே கலங்காமல் கர்த்தரையே சார்ந்து கொள்ளுங்கள். மனம் தளராமல் அவரையே நம்பியிருங்கள்.

**அன்பான வாலிபர்களே! எப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையிலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை வந்தாலும், இயேசுவை நோக்கிக் கூப்பிடும் போது, இஸ்ரவேல் ஜனங்களை பார்வோனின் கைக்கு விலக்கி பாதுகாத்தது போல, கர்த்தர் உங்களையும் பாதுகாப்பார்.**

## தானியேலை சிங்கக் கெபியில் பாதுகாத்தார்...



தானியேலுக்குத் தீங்கு செய்ய, இராஜ்ய பிரதிநிதிகள் எல்லாரும் சதி ஆலோசனை செய்தார்கள். இராஜாவும், அவரைத் தூக்கி சிங்கக்கெபியில் போடும்படி கட்டளையிட்டான். ஆனாலும் கர்த்தரோ, தானியேலை தீமையினின்று பாதுகாத்துக் கொள்ள உண்மையுள்ளவராக இருந்தார். கிழக்கு வெளுக்குமுன்னே, சிங்கக்கெபிக்கு தீவிரமாய்ப் போன இராஜா, "தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா? என்று கேட்டான்" (தானி. 6:20).

அதற்கு தானியேல், "ராஜாவே, நீர் என்றும் வாழ்க. சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான்" (தானி. 6:21-22). தானியேலின் தேவன் அவனை பாதுகாத்தார். சூளை நெருப்பில் போடப்பட்ட தானியேலின் நண்பர்களை பாதுகாத்து, சிங்க கெபியில் தானியேலுடன் இருந்து அவனையும் ஒரு சேதமும் இல்லாமல் பாதுகாத்தார்.

**அன்பான வாலிபர்களே! இடைவிடாமல் ஜெபித்ததினால் தேவன் தானியேலை பாதுகாத்தார். நீங்களும் கூட சிங்க கெபியின் அனுபவத்தை பெற்றிருக்கலாம். சில காயங்கள் ஏற்பட்டிருக்கலாம். தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள், தனியேலைப் பாதுகாத்த தேவன் உங்களையும் பாதுகாப்பார்!!**

## யோனாவை மீனின் வயிற்றில் பாதுகாத்தார்...



இயேசு யோனாவிடம்: 'நினிவே என்ற ஒரு பெரிய நகரத்திற்குப் போ. அங்கே இருக்கிற ஜனங்கள் மிக மோசமான காரியங்களைச் செய்து வருகிறார்கள், அதைப் பற்றி நீ அவர்களிடம் பேச வேண்டும்' என்று சொல்கிறார்.ஆனால் யோனாவுக்கு அங்கு போக இஷ்டமே இல்லை. அதனால் நினிவேக்கு எதிர் திசையில் போகும் ஒரு படகில் ஏறிக்கொள்கிறார். கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெரும் காற்றை வரவிட்டார். கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்கதாக பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று (யோனா 1:4). கர்த்தர் யோனாவின் மேலும், அவன் பிரயாணம் பண்ணின கப்பல் மீதும், அவன் கூட போன மனிதர்கள் மேலும் பெரும் காற்றை அனுப்பினார். அந்த கப்பல் உடையவும், அவர்கள் பிரயாணம் தடைபடவும், அவர்கள் நோக்கம் நிறைவேறாமல் போகவும், கர்த்தர் அதை அனுமதித்தார். அவரை பாடுகளுக்கு உட்படுத்தினார். சாத்தான் கோதுமையை சுளகில் புடைக்கிறது போல புடைக்க அனுமதி கொடுத்தார். அன்றே அந்தக் காற்றிலே யோனா அகப்பட்டு மாட்டிக் கொண்டு பலபாடுகளுக்கு, சித்திரவதைகளுக்கு உள்ளானார். 'என்னைக் கடலுக்குள் எறிந்து விடுங்கள், கடல் மறுபடியும் அமைதியாகி விடும்' என்று சொல்கிறார். அப்படிச் செய்ய அவர்களுக்கு மனம் வரவில்லை, ஆனால் புயல் இன்னும் கடுமையானதால் கடைசியில் அவர்கள் யோனாவைக் கடலுக்குள் வீசி விடுகிறார்கள். புயல் உடனே நின்று விடுகிறது, கடலும் அமைதியாகி விடுகிறது. யோனா தண்ணீருக்குள் மூழ்கிக் கொண்டு போகையில், ஒரு பெரிய மீன் அவரை விழுங்கி விடுகிறது. மூன்று நாட்களுக்கு அந்த மீனின் வயிற்றுக்குள் இருக்கிறார். தேவனுக்கு கீழ்ப்படிந்து நினிவேக்குப் போகாததற்காக யோனா மிகவும் வருந்தி தேவனை நோக்கி ஜெபிக்கிறார். அப்போது அந்த மீன் யோனாவை கரையில் கக்கிப்போடும்படி செய்கிறார். அதன் பிறகு யோனா நினிவேக்குப் போகிறார்.

**அன்பான வாலிபர்களே! தேவனின் சித்தத்தை விட்டு, உங்களுடைய சுய சித்தம் செய்யும் போது, யோனாவைப் போல கடலின் கொந்தளிப்புக்கு, மீனின் வயிற்றுக்குள் போகும் சூழ்நிலை உண்டாகும். எனவே தேவ சித்தத்தை அறிந்து செயல்படுங்கள். எந்த பெருங்காற்று வந்தாலும் அதற்கு விலக்கி பாதுகாப்பார்.**

ஊழிய பயணம்: ஏயலா




**எழுப்புதல் வீரர் பேதுருவால் புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுதல் (அப். 10).**

இத்தாலியா பட்டணம் - செசரியா என்னும் துறைமுகப் பட்டணத்திலே கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி தேவ பக்தியுள்ளவராய், வீட்டாரனைவரோடும் தேவனுக்கு பயந்தவராய் ஜனங்களுக்கு மிகுந்த தான தர்மங்கள் செய்கிறவராய், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகிறவராய் வாழ்ந்து வந்தார். பகல் ஒன்பதாம் மணி நேரத்தில், கொர்நேலியு ஜெபிக்கும் போது, தேவ தூதன் தன்னிடத்தில் வந்து, யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி என்று தெளிவாக இருப்பிடத்தையும், யார் வீட்டில் தங்கி இருக்கிறார் என்பதையும் கூறி, அவன் நீ செய்ய வேண்டியதை உனக்கு கூறுவான் என்று சொல்வதாக தரிசனத்தில் காண்கிறார்.

பேதுருவும் யூத முறைமையின்படி செய்யும் மத்தியான வேளை ஜெபத்தை செய்யும்படி சீமோன் என்பவரின் மேல் வீட்டில் ஏறுகிறார். மிகுந்த பசியோடு சாப்பிட மனதாயிருக்கையில், உணவு ஆயத்தம் பண்ணப்படுகையில் ஞானதிருஷ்டியடைந்து (தரிசனத்தில்) வானத்திலிருந்து நாலுமுனை கட்டப்பட்ட பெரிய கூடு தன்னிடத்தில் இறங்கி தரையில் விடப்பட்டிருப்பதாகவும் அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாக காண்பதோடு, பேதுருவே எழுந்திரு, அடித்து புசி என்று சொல்லுகிற சத்தத்தையும் கேட்கிறார். புலி பசித்தாலும் புல்லை தின்னாது என்பது போல பசியோடிருந்தாலும் தரிசனத்தில் காட்டப்பட்ட உயிரினங்களை சாப்பிட அவரது மனது விரும்பவில்லை. காரணம், பழைய ஏற்பாட்டிலே கர்த்தர் கொடுத்திருந்த புசிக்கத்தக்கவைகள், புசிக்கத்தகாதவைகள் பட்டியலை (லேவி. 11, உபா. 14) மனதில் வைத்து, நிதானித்து தீட்டும் அசுத்தமாயிருக்கிறதை நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்று கூறுகிறார். இதன் மூலம் அவரது மனித உணர்வுகளோ, சரீர பெலவீனங்களோ யூத முறைமைகளையும் கர்த்தரின் கட்டளைகளையும் மீறுவதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.



இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்பட வேண்டும் (உபா. 19:15) என்பது போல தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்ற சத்தம் மூன்று முறை தொனிக்கிறது. இந்த தரிசனத்தின் மூலம் கர்த்தர் தனக்கு ஏதோ ஒரு காரியத்தை உறுதிப்படுத்துவதை குறித்து சிந்திக்கையில், கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மூன்று பேர் பேதுருவைத் தேடி வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்கள். ஆவியானவர் பேதுருவிடம், ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் நீ அவர்களுடனே போ என்று சொல்கிறார். இயேசுவானவர் முதலாவது தனது பன்னிரண்டு அப்போஸ்தலரையும் ஊழியத்திற்கு அனுப்புகையில், நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்கு போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்துக்கு போங்கள் என்று கட்டளையிட்டிருந்தாரே (மத். 10:5,6), இப்பொழுது

ஆவியானவர் புறஜாதி மனுஷரோடு போகச் சொல்கிறாரே, இது யூத வளர்ப்பு முறைமைக்கு விரோதமானதே என்று சிந்தித்து இருக்கலாம். இருப்பினும் எவ்வித வாக்குவாதமோ, முரட்டாட்டமோ செய்யாமல் உடனடியாக கீழ்ப்படிகிறார். உடனே கீழே சென்று அவர்களை வீட்டுக்குள் அழைத்து வந்து தனக்கு ஆயத்தம் பண்ணியிருந்த உணவை அவர்களோடு பகிர்ந்து அவர்களை உபசரிக்கிறார். ஒரு யூதன் புறஜாதியாரை வீட்டுக்குள் அழைத்து உபசரிப்பது இதுவே முதன்முறையாக இருந்திருக்கும். இது பேதுருவுக்கு சற்று கடினமானதாகவும், தவறு செய்கிறோமோ என்ற உணர்வையும், மற்ற யூதர்கள் தன்னைப் பகைத்து ஒதுக்கலாம் என்ற மனபதற்றத்தையும் கொடுத்திருக்கலாம். இருப்பினும் கர்த்தருக்கு கீழ்ப்படியும் அவரது உண்மையான சீஷத்துவத்தையும் கர்த்தர் மேல் அவர் வைத்திருக்கும் அன்பையும், மரியாதையையும், விசுவாசத்தையும் பிரதிபலிக்கிறது. மறுநாளில், யோப்பா பட்டணத்து சில சகோதரர்களையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு ஒருநாள் பிரயாணத் தூரமான சுமார் 30 மைலுக்கு மேல் (யோப்பா - செசரியாவுக்கு) பயணித்து கொர்நேலியு வீட்டை வந்து அடைகிறார்.



பொதுவாக ரோம படைத் தலைவர்கள் வீரம், எவரையும் மதிக்காத தன்மை, புத்திக் கூர்மை, கலகங்களை அடக்கும் திறமை, மரிக்கும் வரை தேசத்திற்காக போராடுதல் ஆகிய பண்புகள் உடையவராக இருப்பார்கள். கொர்நேலியு வித்தியாசமானவராக அன்பு, பாசம், பொறுமை, மற்றவர் நலன் கருதுதல், தாழ்மை, தெய்வ பயம் உடையவராக காணப்பட்டார். கொர்நேலியு தன் உறவின் முறையார், விசேஷித்த சிநேகிதர் முன் பேதுரு உள்ளே பிரவேசிக்கிற போது தனது அதிகாரம், அந்தஸ்து ஆகியவற்றை பெரிதாக கருதாமல் பேதுருவின் கால்களில் விழுந்து பணிகிறார். பேதுருவும் தன்னை தேவனுக்கு சமமாக்காமல், கொர்நேலியுவைத் தூக்கி தானும் ஒரு மனிதன் தான் என்று தன்னைத் தாழ்த்துகிறார்.



கொர்நேலியு வீட்டில் நடந்த நிகழ்ச்சி பெந்தேகொஸ்தே நாளுக்கு 8 ஆண்டுகளுக்கு பின் நடந்ததாகும். திருச்சபையானது யூதரல்லாதவருக்கு அளித்த முதல் செய்தியின் முதல் கருத்து, தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்பதாகும். இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் குறித்து சாட்சி கூறி இயேசுவே நியாயாதிபதி என்பதையும் பாவ மன்னிப்பையும் குறித்து பேதுரு பேசினார். வசனத்தைக் கேட்ட யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்து பிரமித்து அவர்களுக்கும் கர்த்தருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து பேதுரு கட்டளையிடுகிறார்.

எந்த இனத்தை சேர்ந்தவராயினும் திறந்த உள்ளத்துடன், உண்மையாக, தெய்வ பக்தியுடன் தம்மை தேடுகிற எவரையும் தேவன் சந்திக்கிறார் என்பதற்கு கொர்நேலியு ஒரு எடுத்துக்காட்டு. யூதர்களும், யூதரல்லாதோரும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பதை பேதுருவுக்கு அறிவிப்பதற்காக சுத்தமான விலங்குகளும், சுத்தமில்லாத விலங்குகளும் காட்டப்பட்டு உள்ளன என்பதை அனைவரும் உணர்ந்து கொள்கின்றனர். பேதுரு எருசலேமுக்கு திரும்பிய பின், இச்சம்பவத்தை அறிந்த சிலர் பேதுருவோடு வாக்குவாதம் செய்கின்றனர். பேதுரு கோபமோ, எரிச்சலோ அடையாமல் தாழ்மையுடனும், பொறுமையுடனும் தன்னிடம் கேள்வி கேட்ட யாவரிடமும் ஆவியானவரின் செயல்பாடுகளை நிதானமாக விவரித்து ஒருமனதை காத்துக் கொள்கிறார். ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சபையார் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இன்னும் பல முக்கிய சம்பவங்களோடு பேதுருவோடு ஒரு பயணம் தொடரும்...

கெத்சி கிளாரின்

# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்!

தாவீது தேவ கிருபையால் சம்பாதித்து வைத்துப்போன தேசம் சாலொமோனிடம் வந்தது. அனுபவமற்ற தன்னால் அதை நிர்வகிக்க முடியாது என்பதை அறிந்திருந்த சாலொமோன் முன்வைத்த இந்த முதல் விண்ணப்பமே தேவனின் பார்வையில் உகந்ததாகவும் அமைந்திருந்தது. இவர் ஜெபிக்கிற ஒரு இராஜாவாக இருந்தார். சாலொமோன் இராஜா ஆட்சிக்கு வரும் போது அவருக்கு 20 வயது கூட ஆகவில்லை. தேவனை மிகவும் நேசிக்கிறவர். தன் தகப்பன் தாவீது கொடுத்த நல்ல அறிவுரைகளைப் பின்பற்றி நடந்தார். தேசத்திற்காக சாலொமோன் ஏறெடுத்த இந்த சுயநலமில்லாத ஜெபத்தை தேவன் கேட்டு அவனுடைய விண்ணப்பத்திற்கும் மேலாக தேவன் அவனுக்கு அருளினார்.

இக்கட்டான சூழ்நிலைகளில் நாமும் இதுபோன்ற சுயநலம் இல்லாத ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். நம்முடைய தேவைகளுக்காக நாம் அதிகமாக ஜெபித்து விட்டோம், இனி நாம் மற்றவர்களுக்காகவும், தலைவர்களுக்காகவும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

''இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்'' (1 இராஜா. 3:7-9). இதுவே சாலொமோன் இராஜாவின் ஜெபமாக இருந்தது.

- சாலொமோன் கேட்ட ஞானம் சிறுபிள்ளைகளுக்குத்தான் பொருந்தும் என்று நினைத்து பொதுவாக வீட்டில் படிக்கிற பிள்ளைகளுக்கு இந்த ஜெபத்தைச் சொல்லித் தருவதுண்டு.
- ஆனால், வாழ்வில் பல சவால்களைக் கண்டு எவ்வளவோ அனுபவம் பெற்ற பெரியவர்கள் கூட சமயங்களில் ஞானமற்றுச் செயல்படுவதை நாம் பார்க்காதவர்கள் அல்ல.
- ஆக, இந்த ஜெபம் படிக்கிற சிறுபிள்ளைகளுக்கே உரியது என்று கருதி ஒதுக்கிவிடாமல், நம்முடைய அன்றாடச் செயல்பாடுகளைத் தேவனிடம் ஒப்புவித்துச் சரியாக செயல்பட அவரிடமே ஞானத்தை கேட்பதுதான் முறையானது.
- காரணம், கிறிஸ்துவே தேவனால் நமக்கு நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார் (1 கொரிந்தியர் 1:31). அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (கொலோசெயர் 2:3).



முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுதலில், ஞானத்தைத் தேடுவதும் ஞானமாகிய கிறிஸ்துவை தேடுவதும் முதலாவதாக வரவேண்டும். இப்படி கேட்கும் ஜெபத்தின் விளைவாக ஞானம் மட்டுமல்ல, மற்றவைகளும் சாலொமோன் இராஜாவுக்கு அளிக்கப்பட்டதுபோல நமக்கும் ''கூடக்'' கொடுக்கப்படும்.

நாம் விரும்பி ஜெபத்தில் வேண்டிக்கொள்வது மட்டுமல்ல, 'நாம் கேட்கத் தெரியாமல் விட்டுவிட்டவைகளும், நமக்கு இதெல்லாம் தேவை' என்று தேவனே அறிந்தவைகளும் தாராளமாகக் கொடுக்கப்படும். நீங்கள் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும், அதாவது ஜெபிக்கிறதற்கும், விரும்புகிறதற்கும் மேலாகத் தருபவர் நம் இயேசு கிறிஸ்து.

**அன்பு வாலிபர்களே! நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் ஜெபிக்கும் நீ, சாலொமோனைப் போன்று தேவனுக்கு பிரியமான ஜெபத்தை ஏறெடுத்ததுண்டா என்று சிந்தியுங்கள்!** ●



# யோனா

## (தேவ சித்தத்திலிருந்து ஓடுதல்)

அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதமும் சிறிய தீர்க்கதரிசன நூல்களில் ஐந்தாவது புத்தகமான "யோனா" பற்றி சுருக்கமாகக் காணலாம்.

**ஆசிரியர்: யோனா**

காலம்: கி.மு. 793 – 753

அதிகாரங்கள்: 4

வசனங்கள்: 481

வார்த்தைகள்: 1,321

முக்கிய நபர்கள்: யோனா

### அறிமுகம்

பிற இன மக்களின் மேல் அன்பு காட்டாமலிருப்பது தேவ சித்தத்தைச் செய்யத் தடையாக இருக்கிறது என யோனா காட்டுகிறார். மேலும் தேவன் முழு உலகத்தின் மீதும் கரிசனையுள்ளவராக இருக்கிறார் என்றும், மனந்திரும்பி அவரிடம் சேரும் யாவருக்கும் அவர் இரட்சிப்பை அருளுகிறார் என்றும், மனிதர்கள் மேலும், இயற்கையின் மேலும் ஆளுகை உடையவராக இருக்கிறார் என்றும் யோனா சித்தரிக்கிறார்.

### யோனா – சுருக்கம்

யோனா தப்பி ஓடுதல்

- யோனாவின் ஓட்டத்திற்கு காரணம் (1:1,2 வசனங்கள்)
- தப்பி ஓடுதலின் வழி (1:3 வசனம்)
- தப்பி ஓடுதலின் விளைவு (1:4–17 வசனங்கள்)

### யோனாவில் கிறிஸ்து

யோனாவின் வாழ்க்கையில் இரட்சகராகவும், தேவனாகவும் இயேசுவைக் காணலாம் (2:9).

### யோனாவின் ஜெபம்

- ஜெபத்தின் தன்மைகள் (2:1–9 வசனங்கள்)
- ஜெபத்திற்கு பதில் (2:10 வசனம்)

### யோனாவின் ஜெபம்

- ஜெபத்தின் தன்மைகள் (2:1–9 வசனங்கள்)
- ஜெபத்திற்கு பதில் (2:10 வசனம்)

### யோனாவின் பிரசங்கம்

- பிரசங்கிக்கும்படி, தேவனின் கட்டளை (3:1–3 வசனங்கள்)
- யோனாவின் பிரசங்கத்தின் பொருளடக்கம் (3:4 வசனம்)
- யோனாவின் பிரசங்கத்தின் விளைவு (3:5–10 வசனங்கள்)

### யோனா கற்றுணர்தல்

- தேவனிடத்தில் யோனாவின் புகார் (4:1–3 வசனங்கள்)
- யோனாவுக்கு தேவனுடைய பாடத்திட்டம் (4:4–11 வசனங்கள்)

# ஜெபக் கையேடு

நவம்பர் 2022

## குழந்தைக் கடத்தல்

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 60 ஆயிரம் குழந்தைகள் நமது இந்தியாவில் கடத்தப்படுகின்றனர். ஒவ்வொரு எட்டு நிமிடத்திற்கும் ஒரு குழந்தை என ஒரு நாளைக்கு 174 குழந்தைகள் காணாமல் போகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5 லட்சம் குழந்தைகள் காணாமல் போவதாக குழந்தைகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது. இவர்களில் 50 சதவீதம் மட்டுமே கண்டுபிடிக்கப்படுகின்றனர் மீதம் 50 சதவீதம் குழந்தைகளின் நிலைமை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. பெரும்பாலும் கடத்தப்படும் சிறார்கள் பிச்சை எடுக்கவும் பலர் பாலியல் தொழிலுக்கும் கட்டாயமாக்கப்படுகின்றார்கள். தமிழகத்தில் ஒவ்வொரு நாளும் குறைந்தது 5 குழந்தைகள் காணாமல் போகிறார்கள் என்கிறது டைம்ஸ் ஆப் இந்தியா செய்தித்தாள்.



ஜெபம்: எஸ்தர்

### ஜெபக்குறிப்புகள்

- குழந்தைகளையும் பெண்களையும் கடத்திச் சென்று அவர்கள் எதிர்காலத்தை கெடுக்க நினைக்கும் பொல்லாத ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.
- எதிர்காலத்தைப் பற்றி சற்றும் யோசிக்காமல் சுயநலமாய் இக்கடத்தலில் ஈடுபடும் தலைவர்களின் இருதயம் தொடப்படவும் அவர்கள் மனம் திரும்பவும் ஜெபிப்போம்.
- குழந்தைகளை தவறாக நடத்த வேண்டும் என்று திட்டமிட்டு செயல்படும் பிசாசின் தந்திரங்கள் அளிக்கப்பட ஜெபிப்போம்.
- பெண் குழந்தைகளும், பெண்களும் தவறாக நடத்தப்படுகிற அவல நிலை மாறி அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு கிடைக்க ஜெபிப்போம்.
- குழந்தைகளுக்கு தேவன் நல்ல பாதுகாப்பை கட்டளையிடவும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இதிலிருந்து வெளிவரவும் ஜெபிப்போம்.

## குழந்தைத் தொழிலாளர்

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளின் படி உலகெங்கிலும், 5 முதல் 17 வயது வரையிலான சுமார் 153 மில்லியன் குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர். இதில் 73 மில்லியன் பேர் அபாயகரமான தொழில்களில் ஈடுபடுகின்றனர். உலகின் ஏழ்மையான நாடுகளில், நான்கு குழந்தைகளில் ஒருவர் தங்கள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர். இந்தியாவில் மட்டும் 70 முதல் 80 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாக சிஏசிஎல் தெரிவித்திருக்கிறது. இதேபோல் வங்காளதேசத்திலும் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாக அது தெரிவித்துள்ளது.

### ஜெபக்குறிப்புகள்

- குழந்தை தொழிலாளர்களாக மாற்றப்பட்டிருக்கும் சிறு குழந்தைகளை தேவன் தாமே இதிலிருந்து மீட்டு கொடுக்க ஜெபிப்போம்
- குழந்தைகளை தொழிலாளர்களாக மாற்றும் இந்த நிலை மாறுவதற்கும் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.
- குழந்தை தொழிலாளர்களாக மிகவும் அபாயகரமான தொழில்களில் ஈடுபடும் சிறுவர்கள் மீட்கப்பட ஜெபிப்போம்.
- சிறுபிள்ளைகளை தொழில்களுக்காக கொண்டு சென்று அவர்களை போதை, கடத்தல், விபச்சாரம் போன்ற சமூக விரோத செயல்களுக்கு விற்கப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.



## குழந்தைத் திருமணங்கள்

2019-ம் ஆண்டு ஜூலை 2-ம் தேதி முதல் நவம்பர் 14 வரை சுமார் 11,346 குடும்பங்களிடம் தேசிய குடும்ப நல கணக்கெடுப்பு (NFHS-5) ஆய்வினை நடத்தியது. அதில் ஆந்திராவில் 29.3 சதவிகித குழந்தைத் திருமணங்கள் பதிவாகி முதலிடத்தில் உள்ளது. 23.5 சதவிகித குழந்தைத் திருமணங்களுடன் தெலங்கானா இரண்டாவது இடத்திலும், 21.3 சதவிகிதத்தில் கர்நாடகா மூன்றாவது இடத்திலும், 12.8 சதவிகிதத்தில் தமிழ்நாடு நான்காவது இடத்திலும், 6.3 சதவிகிதத்தில் கேரளா கடைசி இடத்திலும் இருக்கின்றன. இதுமட்டுமல்லாமல் 15 முதல் 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு திருமணமாகி குழந்தைகள் இருப்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. 2019- 2020 மற்றும் 2020-2021-ம் ஆண்டுகளில் இரண்டு கட்டமாக நடத்தப்பட்ட NHFS (The National Family Health Survey) கணக்கெடுப்பின்படி இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் 3.5% குறைந்துள்ளன. உலக அரங்கில் குழந்தைத் திருமணத்தில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.

### ஜெபக்குறிப்புகள்

- குழந்தை திருமணம் நம் தேசத்திலிருந்து முற்றிலும் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.
- குழந்தை திருமணம் செய்ய நினைக்கும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு உண்டாகவும், குழந்தைகள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.
- சிறார்களுக்கு இதைப்பற்றிய விழிப்புணர்வு உண்டாகவும் அதை தடுப்பதற்கு வேண்டிய அதிகாரமும் அரசு கொடுப்பதற்கு ஜெபிப்போம்.
- குழந்தை திருமணம் செய்வதனால் மன உளைச்சலுக்கும் மன அழுத்தத்திற்குள்ளாகி இருக்கும் சிறார்கள் விடுவிக்கப்படவும் சுகம் பெறவும் ஜெபிப்போம்.
- உலக அளவில் குழந்தை திருமணத்தில் இந்தியா முதலிடம் வகிப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இந்திய தேசத்தில் உள்ள ஜனங்களுக்குள் ஒரு மறுரூபம் உண்டாக ஜெபிப்போம்



## மாணவர்கள் தற்கொலை



2021 ஆம் ஆண்டில் தற்கொலையால் இறந்த மாணவர்களின் எண்ணிக்கை 4.5 சதவீதம் அதிகரித்துள்ளது என்று தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. மகாராஷ்டிராவில் 2021 ஆம் ஆண்டில் 1,834 மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அடுத்தப்படியாக மத்தியப் பிரதேசத்தில் 1,308 மாணவர்கள், மற்றும் தமிழ்நாட்டில் 1,246 மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். 2020 ஆம் ஆண்டில், 12,526 மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டனர், அதே நேரத்தில் 2021 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 13,089 ஆக உயர்ந்துள்ளது. 2017 மற்றும் 2019 க்கு இடையில், நாட்டின் மொத்த தற்கொலைகளில் மாணவர்களின் தற்கொலைகள் 7.40 சதவீதம் முதல் 7.60 சதவீதம் வரை இருந்தது. இது 2020ல் 8.20 சதவீதமாக அதிகரித்து, 2021ல் 8 சதவீதமாக குறைந்துள்ளது. தற்கொலை செய்து கொண்ட 18 வயதுக்குட்பட்ட 10,732 மாணவர்களில் 864 பேர் 'தேர்வில் தோல்வி' காரணமாக இறந்தவர்கள் என்று அறிக்கை கூறுகிறது.

### ஜெபக்குறிப்புகள்

- மாணவர்களிடையே காணப்படும் தற்கொலையின் எண்ணங்கள் அகற்றப்படவும், தற்கொலையைத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்படவும் ஜெபிப்போம்.
- தேர்வின் தோல்வி காரணமாக தற்கொலை செய்யத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்படவும், அவர்கள் மனநிலையில் மாற்றம் உண்டாகவும் ஜெபிப்போம்.
- இந்திய தேசத்தில் உள்ள மாணவர்கள் மேல் தேவ ஆளுகையும், பாதுகாப்பும் உண்டாக ஜெபிப்போம்.
- படிக்கும் மாணவர்களுக்கும் பள்ளிகளில் தன்னம்பிக்கை உண்டாக்கும் விழிப்புணர்வு மையங்கள் உருவாக்கப்பட ஜெபிப்போம்.
- இனியும் எந்த மாணவர்களும் தற்கொலை செய்யாதபடி தேவ பாதுகாப்பு ஒவ்வொருவர் மேலும் உண்டாக ஜெபிப்போம்.



# RED ALERT
# பிலேயாம்

பிரியமான வாலிபர்களே, மீண்டும் இந்த ரெட் அலர்ட் மூலம் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. இந்த ரெட் அலர்ட் மூலம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும், ஓட்டத்தை நன்றாக ஓடிக் கொண்டிருந்தவர்களும் அவர்கள் செய்த சிறிய தவறினாலும், பாவத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும் தேவ அழைப்பை விட்டு விலகி, கொடிய தண்டனையை அடைந்தார்கள் என்பதை குறித்து தியானித்து வருகிறோம். இந்த ரெட் அலர்ட் பகுதியில் பேயோரின் குமாரன் பிலேயாமைக் குறித்து தியானிக்கப் போகிறோம். எண்ணாகமம் 22-24 அதிகாரத்தில் பிலேயாமைக் குறித்து வாசிக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்களுக்கு பயந்து மோவாப் ராஜா, இஸ்ரவேலை சபிக்க பிலேயாமை அழைத்தான். ஆனால் பிலேயாம் 3 முறை இஸ்ரவேலை ஆசீர்வதித்தான். ஆனாலும் எண்ணாகமம் 31:8ம் வசனத்தில், இஸ்ரவேலர்கள் பிலேயாமை கொன்று போட்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலை ஆசீர்வதித்த பிலேயாமை இஸ்ரவேலர்கள் ஏன் கொல்ல வேண்டும்?



பிலேயாம் தீர்க்கதரிசியாக இருந்தாலும், அவனுக்கென்று விசேஷித்த கிருபைகளை தேவன் கொடுத்தாலும், அவன் இருதயம் தேவனுக்கு பிரியமானதாக இருந்ததில்லை. அவன் இந்த கொடிய ஆக்கினைக்குள்ளானதிற்கு என்ன காரணம்?

## பண ஆசை, பேராசை

இஸ்ரவேலர்களை சபிக்க பாலாக் எனும் மோவாபின் இராஜா, தன் நாட்டிலுள்ள மூப்பர்களை குறிசொல்வதற்குரிய கூலியைக் கொடுத்து அனுப்பினான். முதலில் பிலேயாம் கர்த்தரிடத்தில் விசாரித்து, அதை நிராகரித்து விட்டான் (எண். 22:13). மோவாப் இராஜா மறுபடியும் அவர்களிலும் கனவான்களான பிரபுக்களை அனுப்பினான் (எண். 22:15). மிகப் பெரிய பிரபுக்கள், செல்வங்களோடு அவனைப் பார்க்க வந்ததினால், அவன் இருதயம் அதை

இச்சிக்கத் தொடங்கியது. கர்த்தரின் சித்தத்தின்படி செய்து வந்த பிலேயாம் பெயர் புகழையும், செல்வங்களையும் பார்த்தவுடன் அவன் தேவ சித்தத்தை விட்டு விலகி பாலாக்குடன் செல்ல கர்த்தரிடம் தொடர்ந்து ஜெபித்தான். கர்த்தர் இந்தக் காரியத்தை விரும்பவில்லை என்றாலும் தொடர்ந்து அதற்காக ஜெபித்ததினால், ஒரு நிபந்தனையோடு கர்த்தர் அவனைப் போக அனுமதித்தார். ஆனால் அவன் இருதயம் கர்த்தருக்கு முன்பாக செம்மையாக இருக்கவில்லை, அது மாறுபாடாக இருந்தது (எண். 22:32). கர்த்தர் சொன்னதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட மோவாப் இராஜா கொடுக்கும் வெகு மதிகளின் மீது அவன் இருதயம் இருந்தது. கர்த்தரின் சித்தத்திற்கு எதிராக அவன் செய்த காரியமே அவன் வீழ்ச்சிக்கு ஆரம்பமாக இருந்தது. 2 பேதுரு 2:15ல் செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியை பின்பற்றினார்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பினான் என்று எழுதப்பட்டிருக்கிறது. நம் வாழ்வில் கூட நம் நோக்கம் கர்த்தருக்கு பிரியமானதாக இருக்க வேண்டும், நம் இருதயம் பணத்தையோ, பொருளையோ, புகழ்ச்சியையோ நாடி தேடுமானால் நம் நோக்கம் முழுமை பெறாது. அதின் முடிவு அழிவாகத்தான் இருக்கும்.



## இஸ்ரவேல் இடறுவதற்கான காரணமாக இருந்தான் – பிலேயாம்

கர்த்தருடைய தூதனானவரால் எச்சரிக்கப்பட்ட பின்பு, பிலேயாம் பாலாக்கினிடத்தில் வந்தான். இஸ்ரவேல் தேசத்தை சபிக்க பாலாக்கினால் அழைக்கப்பட்டிருந்தாலும், கர்த்தர் அவனுக்கு கட்டளையிட்டபடியே அவர்களை மூன்று முறை ஆசீர்வதித்தான். இதனால் பாலாக் அவன் மீது மிகுந்த கோபம் கொண்டான். பாலாக்கின் கோபத்தை தீர்க்கவும், அவனிடமிருந்து வெகுமதிகளைப் பெறவும், ஒரு தவறான ஆலோசனையைப் பாலாக்கிற்கு சொன்னான். அதைக் குறித்து வெளி. 2:14ல் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக போடும்படி பாலாக் என்பவனுக்கு போதனை செய்த பிலேயாம் என்று எழுதப்பட்டிருக்கிறது. எண். 25:1ம் வசனத்தில் இஸ்ரவேலர்கள் மோவாபிய ஸ்திரீகளோடு வேசித்தனம் பண்ணினார்கள் என்று பார்க்கிறோம். இந்த இடறலுக்கு காரணம் பிலேயாம், கர்த்தருடைய வாக்கை சொல்ல வந்தவன், பணத்திற்கு ஆசைப்பட்டு கர்த்தரின் ஜனங்கள் தீட்டுப்பட காரணமாக மாறினான். இஸ்ரவேலை சபிக்க யாராலும் முடியாது. ஆனால் அவர்கள் பாவம் செய்தால் கர்த்தரே அவர்களை சபித்து விடுவார் என்கிற ஆலோசனையை பாலாக்கிற்கு கொடுத்து சென்றான். அதினால் இன்று வரை பாவம் செய்ய தூண்டுகிறவர்களுக்கு அடையாளமாக பிலேயாம் மாறிப் போனான்.

எண். 31:8ல், இஸ்ரவேலர்கள் அவனைக் கொன்று போட்டார்கள். அவன் முடிவோ பரிதாபமான முடிவாக மாறியது. இன்றைக்கு நம்முடைய நடக்கை, பேச்சு, செயல், பரிசுத்தம் மற்றவர்களுக்கு முன்பாக தேவனை மகிமைப்படுத்துவதாக இருக்கிறதா? அல்லது மற்றவர்கள் இடறலடைவதற்கு காரணமாக இருக்கிறதா? என்பதை யோசித்து பார்த்து செயல் படுவோம்.



**அன்பான வாலிபர்களே, பிலேயாம் தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டவனாக இருந்தாலும், அவன் எடுத்த தீர்மானம், கீழ்ப்படியாமை, இஸ்ரவேலரை பாவம் செய்ய தூண்டியது மற்றும் பொருளாசை அவனை வஞ்சித்து தேவன் தெரிந்து கொண்ட நோக்கத்தை மறக்க செய்து, அவனை அழிவின் பாதைக்கு கொண்டு சென்றது. நம்முடைய வாழ்விலும் தேவன் நியமித்த ஓட்டத்திலிருந்து நம்மை வழிவிலக செய்ய தடைகளும், பாவ சோதனைகளும் வரும். ஆனால் நாம் தெரிந்து கொள்ளப்பட்ட நோக்கத்தில் விழிப்பாக இருப்போமானால் நாம் நம் ஓட்டத்தை ஜெயமாக முடிக்க முடியும்.**

''ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்'' (எபி. 12:1).

அடுத்த **Red Alert** பகுதியில் வேறொரு நபரைக் குறித்து தியானிப்போம்.




வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு!

## EVERY 1ST SUNDAY

**(6TH NOVEMBER)**

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsamane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram, (Land mark : South Police Station to Kamaraj college Road) . 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

**SANKARANKOIL (2:30-5)**
Gethsamane Prayer CenterSekinah Mahal Mullai Nagar
9750955548 / 8344949555

## EVERY 2ND SATURDAY

**(12TH NOVEMBER))**

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY

**(13TH NOVEMBER))**

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM – 5.30PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9677858766 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

**SATHANKULAM (3-5:30PM)**
Hendry Matric Higher Secondary School
Mela Sathankulam
Ct: 9442885315

## EVERY 3RD SUNDAY
**(20TH NOVEMBER))**

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90, 1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center 22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur,
9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via), Keelamathapuram, Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road. 9488475315

**NALUMAVADI (3-5:30PM)**
Tabernacle of God, Nalumavadi 9442885315

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre, MBT Road, Navalpur
9500283179 | 9442885315

## EVERY 4TH SATURDAY
**(26TH NOVEMBER))**

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY
**(27TH NOVEMBER))**

**THIRUVALLUR (3-5:30)**
Gethsemane Prayer Center H S R Tower, 2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3PM-5PM)**
Gethsemane Prayer center, Near Arun Hospital, Royakottai Road,
Ct: 9962085523 | 9524999711

## MUMBAI (5PM - 8PM)

**1st sunday - Dharavi**
**2nd Sunday- Bhandup**
**3rd Sunday - Malad**
**9004882470**


WE'RE GOING LIVE
REVIVAL IGNITERS
ON SUNDAY 27TH NOVEMBER, TIME: 3 - 5PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
9750955547

எழுப்புதல் செய்தி: சதீஷ்

REVIVAL

# வல்லமையின் எழுப்புதல்!

ஒவ்வொரு மாதமும் எழுப்புதல் செய்தியைப் படித்து வருகிற நீங்கள் எழுப்புதலுக்காக ஜெபிப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். இந்த மாதத்தில் வல்லமையின் எழுப்புதலைக் குறித்து பார்க்கப் போகிறோம். தேவனுடைய வல்லமை வெளிப்படும் போது திரளான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தரை தெய்வமாக ஏற்றுக்கொள்கின்றனர். ஆதி அப்போஸ்தலர்களாகிய பேதுரு, பவுல் போன்ற தேவ மனிதர்களை தேவன் தன்னுடைய வல்லமையினால் நிரப்பி, ஏராளமான ஜனங்களை தன் பக்கம் திரும்பினர். ''பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களின் மேல் (பிணியாளிகள்) படும்படிக்கு அவர்களை வெளி வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள்'' (அப். 5:15). சுற்றுப்புற கிராமங்களிலிருந்து திரளான பிணியாளிகளையும் அசுத்த ஆவி பிடித்தவர்களையும் எருசலேமுக்கு கொண்டு வந்தார்கள். இவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள். எருசலேமில் தேவனுடைய வல்லமை வெளிப்பட்டதினால் திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் கர்த்தர் பக்கமாக அதிக அதிகமாய் சேர்க்கப்பட்டார்கள். அந்த பட்டணமே மறுரூபம் அடைந்தது. எங்கு பார்த்தாலும் இயேசு என்கிற நாமம் தொனிக்கப்பட்டது. பவுல் சென்ற இடமெல்லாம் தேவன் அவருடனேகூட இருந்து தன்னுடைய வல்லமையை காண்பித்து புறஜாதி ஜனங்கள் அநேகரை தன் பக்கம் திரும்பினர். சப்பாணிகளும், முடவர்களும், அசுத்த ஆவி பிடித்தவர்களும் இவர் மூலம் குணம் அடைந்தார்கள். இவர்கள் சென்ற இடமெல்லாம் தேவனுடைய வல்லமை வெளிப்பட்டு ஒரு மாபெரும் எழுப்புதல் ஜனங்கள் மத்தியில் உண்டானது.

ஆண்டவர் நம்முடைய தேசத்தில் தேவ ஊழியங்கள் மூலம் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தி இருக்கிறார். இந்தியாவில் ஊழியம் செய்யும்படி வந்த T.L. ஆஸ்பார்ன் வேத வசனங்களையும், தேவனுடைய வார்த்தைகளையும் அறிவித்து வந்த போது, ஒருவர்கூட இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் சோர்ந்து போன இவர் மீண்டும் தன் சொந்த தேசமாகிய அமெரிக்காவுக்கு சென்று ஊழியம் செய்ய ஆரம்பித்தார். அங்கும் பெரிய அளவில் எழும்பி பிரகாசிக்க முடியவில்லை. இதற்கான காரணத்தை அறிந்து தேவ சமூகத்தில் உபவாசமிருந்து ஜெபம் பண்ணி தேவ வல்லமையை பெற்றுக் கொண்டார். அதற்கு பின்பு இவருடைய ஊழியத்தின் பாதை மாற ஆரம்பித்தது. கிட்டத்தட்ட 40 ஆண்டுகளில் 70 நாடுகளுக்கும் மேல் சென்று இயேசுவை அறிவிக்க ஆரம்பித்தார். இவர் போன இடமெல்லாம் திரளான ஜனங்கள் சுகம் பெற்று இயேசுவை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் மத்தியில் தேவ வல்லமை இவர் மூலமாய் வெளிப்பட்டது. ஒரு கூட்டத்தில் தேவ வல்லமை இவர் மூலம் வெளிப்பட்டு 96 குருடர்கள் பார்வை அடைந்தார்கள்.

1961ஆம் ஆண்டு மீண்டும் இந்தியா வந்த இவர் கொல்கத்தா, ஆந்திரா, தமிழ்நாடு மாநிலங்களின் பல இடங்களில் சென்று ஊழியம் செய்ய ஆரம்பித்தார். இவர் மூலம் தேவன் தன்னுடைய வல்லமையை அனுப்பி திரளான ஜனங்களை சுகப்படுத்தி அசுத்த ஆவிகள் பிடியிலிருந்து விடுவித்தார். ஏராளமான ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டனர்.

**எனக்கன்பான வாலிபர்களே! நீங்களும் தேவனுடைய வல்லமையை பெற்றுக் கொள்ளும்படி தேவ சமூகத்தில் காத்திருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய வல்லமையினால் உங்களை நிரப்பி, நீங்கள் போகிற எல்லா இடங்களிலும் இருக்கும் ஜனங்களை தன் பக்கம் திரும்புவார். உங்கள் மூலமாக தேவ வல்லமை வெளிப்பட்டு ஒரு மாபெரும் எழுப்புதல் தேசத்தில் உண்டாகும் ●**




என் அன்புக்குரிய தம்பி மற்றும் தங்கைகளுக்கு வாழ்த்துக்கள். மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை நீங்கள் அனுதினமும் தரித்துக் கொள்ள வேண்டுமென்று எபேசியர் 4:24ன்படி, உங்களை வேண்டிக்கொண்டு வாருங்கள், இம்மாதக் கட்டுரைக் குள்ளாக போவோம். இம்மாதக் கட்டுரையின் தலைப்பு ''பாதுகாவலர்''. ஆம் நண்பர்களே, நாம் வாழும் இந்த உலகம் ஆதாமின் பாவம் காரணமாக பாவத்துக்குட்பட்டு இருப்பதாக வேதம் கூறுகிறது. இந்தப் பாதிக்கப்பட்ட உலகத்தில் பல சூழ்நிலைகளில் நாம் சரீர ஆபத்துகள், பொருளாதார பிரச்சனைகள், இயற்கை மற்றும் செயற்கை சேதங்கள், ஆவிக்குரிய போராட்டங்கள், தடைகள் மற்றும் சாபங்கள் என பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. இம்மாதிரியான சூழல்களில் கர்த்தரின் பிள்ளைகளாகிய நமக்கு அவர் மாத்திரமே நம் கோட்டையாகவும், துருகமாகவும் இருக்கிறார். ''தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்'' (சங்கீதம் 46:1) என்று நாம் வாசிக்கிறோம்.

ஆம் நண்பர்களே, பல கிறிஸ்தவர்கள் சிந்திக்கும் ஒரு காரியம் என்னவென்றால், நமக்கு ஏன் ஆபத்துகள் நேரிடுகிறது? நாம் யாருக்கும் உளமாற எந்த கேடும் நினைத்ததில்லையே! நாம் நன்மை செய்தும்கூட நமக்கு ஏன் இத்தனை இன்னல்கள் ஏற்படுகிறதென்று சிந்திப்பதுண்டு. இது வேதத்திற்கு எதிர்மாறான ஓர் சிந்தனை. காரணம், நாம் விழுந்துப் போன ஓர் உலகத்தில் வாழ்கிறோம். நான் பொதுவாக பயன்படுத்தும் எடுத்துக்காட்டு நான் சாலையில் ஓர் காரில் எல்லாப் பாதுகாப்பு உபகரணங்களோடு பயணித்தாலும், எதிரில் வரும் வாகனம் ஒன்றை குடிபோதையில் ஒருவன் கட்டுப்பாடின்றி ஓட்டிக் கொண்டு வந்து என் மீது மோதினால், எனக்கு தான் பாதிப்பு ஏற்படுகிறது. ஆம் நண்பர்களே, அதனால் தான் ''...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்'' (யோவான் 16:33) என்று இயேசு சொல்கிறார்.

அதே நேரத்தில், இந்தப் பாதிக்கப்பட்ட உலகத்தில் அவர் மாத்திரமே நம் பாதுகாவலராய் இருக்கிறார். இயற்கை சேதங்களுக்கு அப்பாற்பட்டு, நாம் பார்த்தோமானால், பொதுவாக பிசாசினாலும், நாம் எடுக்கும் தவறான சுயத்தின் தீர்மானங்களாலும் தான் நாம் இன்னலில் சிக்கிக் கொள்கிறோம். ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்'' (1 பேதுரு 5:8) என்று வேதம் சொல்கிறது. ஆம் நண்பர்களே, பிசாசானவன் நம்மைத் திருடவும், கொல்லவும், அழிக்கவுமே தீர்மானித்து வருகிறான். ஆனால் திடன் கொள்ளுங்கள், நம் தேவாதி தேவன் அவனைத் தன் காலின்கீழ் மிதித்து ஜெயித்தார் மற்றும் ''அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்'' (யாக்கோபு 1:14) என்று சொல்கிறது. வேதம் ரோமர் 7ல் சொல்வது போல, பல நேரங்களில் நாம் விரும்புகிறதைச் செய்யாமல், விரும்பாததைச் செய்யவே தீர்மானிக்கிறோம். அப்படிப்பட்டதான பாவச் சரீரத்தில் இருந்து தேவன் தன் குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நம்மை விடுவித்திருக்கிறார். ஆகவே, நம் சுய இச்சைகளினாலே இழுக்கப்பட்டு பாவத்தில் சிக்கிக் கொள்ள, நாம் இனிப் பாவத்திற்கு கீழானவர்களல்ல. என் நண்பர்களே, இவைகளை நான் சொல்வதற்கு முக்கியமான காரணம், நாம் அனுதினமும், இயேசுவோடு அவருக்கு கீழ்ப்படிந்து வாழும்போது, பல ஆபத்துகளை நாம் தவிர்க்கலாம்.

அதே நேரத்தில், நாம் கட்டுப்பாட்டில் இல்லாத தளங்களிலிருந்தோ, சூழ்நிலைகளிலிருந்தோ, பிசாசானவன் நம்மை அழிக்க வேண்டும் என்று ஆபத்துகளை நம் வாழ்க்கையில் கொண்டு வர திட்டமிடும் போது, தேவாதி தேவன் நம் பெலனும், கோட்டையும், அனுகூலமானத் துணையுமாய் இருக்கிறார். ''அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்'' (சங். 91:4) என்று வேதம் சொல்கிறது. அதுபோல யோவான் 10:28ல், அவருடைய ஆடுகளை ஒருவனும் அவரிடத்திலிருந்து பறித்துக் கொள்ள முடியாது என்று சொல்கிறது.

**ஆம் என் அன்பு தம்பி, தங்கைகளே, அவரே நம்மைக் காக்கும் தேவன், நம் காவலர், அவர் சத்தத்தைக் கேட்டு அவரில் தரித்திருங்கள் ●**

# வேதாகமத்தில் பறவைகள் காகம்



ஒவ்வொரு மாதமும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பறவைகளை குறித்து நாம் தொடர்ந்து பார்த்து வருகிறோம். அந்த வரிசையில் இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் பறவை 'காகம்'. காகங்களை குறித்ததான சுவாரஸ்யமான காரியங்களையும் அவைகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சில பாடங்களையும் பார்ப்போம்.

## காகங்களைப் பற்றின சில சுவாரஸ்யமான தகவல்கள்

- உலகில் சுமார் 40 வகையான காக இனங்கள் உள்ளன.
- மரங்களில் வாழும் காகங்கள் பொதுவாக 20 வருடங்கள் வரை உயிர் வாழக்கூடியவை.
- பறவைகளில் காகங்கள் மிகவும் புத்திசாலித்தனமானவை.
- கூர்மையான பார்வை மற்றும் வலிமையான இறக்கைகளை கொண்டவை.
- காகங்கள் அனைத்துண்ணிகள். பழங்கள், விதைகள், தானியங்கள், புழுக்கள், தவளை, நண்டு, மீன், எலி, இறந்த பிராணிகள் என்று அனைத்தையும் உண்பவை.
- காகம் ஒரு கூட்டுப் பறவை. தனக்கு கிடைத்த உணவை தான் மட்டும் உண்ணாமல் தன் இனத்தை அழைத்து பகிர்ந்து உண்ணும் குணம் கொண்டது.
- காகங்கள் செத்து, அழுகின பிரேதங்களை உண்பதன் மூலம் அழுகின உடல்கள் அகற்றப்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.

## வேதாகமத்தில் காகம்

- வேதாகமத்தில் 11 இடங்களில் காகங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வேதத்தில் முதன் முதலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பறவை காகம். நோவா தான் பேழையில் செய்திருந்த ஜன்னலை திறந்து "ஒரு காகத்தை வெளியே விட்டான்; அது புறப்பட்டுப் பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போகும்வரைக்கும் போகிறதும் வருகிறதுமாய் இருந்தது" என்று ஆதியாகமம் 8:7ல் வாசிக்கிறோம். காகத்திற்கு அநேக நல்ல குணாதிசயங்கள் இருந்தாலும், வேதத்தில் ஆண்டவர் காகத்தை அசுத்தமான பறவைகளின் பட்டியலில் சேர்க்கிறார் (லேவி 11 : 13-15). அவைகளை நாம் புசிக்க கூடாது என்று கட்டளையிட்டு இருக்கிறார். நோவா பேழையிலிருந்து வெளியே விட்ட பறவைகளில் புறாவை மட்டும் திரும்ப உள்ளே சேர்த்துக் கொள்கிறார். ஆனால் காகம் ஜலம் வற்றும் வரை போகிறதும் வருகிறதுமாய் இருந்தது என்று நாம் வாசிக்கிறோம். நோவா அதனை பேழைக்குள் சேர்த்துக் கொள்ளவில்லை. காகம் செத்த பிணங்களை உண்ணும் பறவையானதால் ஜலப்பிரளயத்தில் அழிக்கப்பட்ட ஜனங்களின் பிரேதங்களை உண்பதற்கு அது காத்துக் கொண்டிருந்தது. இதனால் அசுத்தமானதை உண்ணும் அந்த பறவையை நோவா தன்னிடமாய் உள்ளே சேர்த்துக் கொள்ளவில்லை.
- I இராஜாக்கள் 17 : 4-6 வசனங்களை வாசிக்கும் பொழுது, எலியா தீர்க்கதரிசி பசியாக இருந்தபோது கர்த்தர் காகத்தின் மூலமாக உணவை அனுப்பி அவரை போஷித்தார். இதை வாசிக்கும் பொழுது கர்த்தர் எதற்காக அசுத்தமான ஒரு பறவையைக் கொண்டு எலியாவை போசிக்க வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது. எத்தனையோ அழகான, சுத்தமான பறவைகள் இருக்கும் பொழுது எதற்காக அசுத்தமான காகத்தை தெரிந்து கொள்ள வேண்டும். அனைவர் பார்வையில் அற்பமாக எண்ணப்படும் அழகற்ற, அசுத்தமான பறவையைக் கொண்டு எலியாவை போஷிக்க கர்த்தர் தெரிந்து கொள்கிறார்.

## காகங்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை

- காகங்களைப் போல கர்த்தரை நோக்கி எப்பொழுதும் துதித்துக் கொண்டிருக்க வேண்டும்.
- காகங்கள் எப்பொழுதும் விழிப்போடு இருக்கும். அதை எளிதில் உயிருடன் பிடித்து விட முடியாது. நாமும் சாத்தான் நம்மை விழுங்கி விடாதபடிக்கு ஆவிக்குரிய ஜீவியத்தில் எப்பொழுதும் விழிப்போடு காணப்பட வேண்டும்.
- காகங்களைப் போல நாமும் கூடி வாழ வேண்டும். உணவு கிடைத்தால் பிறருடன் பகிர்ந்து உண்ண வேண்டும்.
- அதிகாலையிலேயே எழுந்து சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும். குளித்து உடலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- குஞ்சுகளை பாதுகாப்பாக வளர்த்து, உணவு ஊட்டி, பறக்க கற்றுத் தருவதைப் போல நாமும் நல்ல விஷயங்களை நம் பிள்ளைகளுக்கும் கற்றுத் தர வேண்டும்.
- கழுகு தன்னைவிட பலம் வாய்ந்தது என்றாலும் தன்னுடைய எல்லைக்குள் வந்தால் காகம் அதை விரட்டி அடிக்கும். இதுபோல நாமும் சாத்தான் நம்மை தொடாத படிக்கு அவனை எதிர்த்து நிற்க வேண்டும். நம் வாழ்க்கையை அவன் தொடாதபடி கிறிஸ்துவின் பலத்தோடு கூட நாம் அவனை மேற்கொள்ள வேண்டும்.

அன்பு வாலிப தம்பி, தங்கச்சி! தேவன் படைத்த படைப்பில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பயன் உண்டு. எதையும் யாரையும் அற்பமாகவும், இழிவாகவும் எண்ணக்கூடாது. காகத்தை போல அசுத்தத்தில், சேற்றில், குப்பையில் கிடந்த நம்மை தேவன் தெரிந்து கொண்டு அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவி, பரிசுத்தப்படுத்தி, உன்னத பணியை செய்யும் பாத்திரங்களாக வைத்திருக்கிறார். "அவர் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறார்" (சங்கீதம் 147:9). காகத்தை போல அநேகர் பார்வையில் நீ இன்று அற்பமாக, ஒன்றுக்கும் உதவாதவனாக, உதவாதவளாக காணப்படலாம். ஆனால் உன்னை கொண்டு அவர் செய்யும் காரியம் பயங்கரமாக இருக்கும். நீ அவருடைய படைப்பில் விசேஷித்தவன் என்பதை மறந்துவிடாதே!













# அரசு தேர்வு எழுதும் மாணவர்களுக்கான ஆலோசனை கூடுகை

(TNPSC / UPSC)

கடந்த செப்டம்பர் மாதம் 17ம் தேதி அரசு வேலைக்காக தேர்வு எழுத காத்திருக்கும் வாலிபர்களுக்காக பிரத்யேகமாக ஆலோசனை கூடுகை நடத்தப்பட்டது. இதில் சுமார் 2000க்கும் அதிகமான மாணவ / மாணவியர் தங்கள் பெற்றோருடன் கலந்து கொண்டார்கள். சகோதரர் சாம் ஜெபராஜ் அவர்கள் ஆரம்ப ஜெபத்தை செய்து ஆரம்பித்து வைத்தார்கள். அதன் பின்பு இயேசு விடுவிக்கிறார் குழுவினர் பாடல் வேளையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து சகோதரர் அவினாஷ் அவர்கள் இந்த கூடுகைக்கான நோக்கத்தை அறிமுகப்படுத்தினார்கள். எதிர்காலத்தில் அரசாங்க வேலைக்கு எப்படி படிக்க வேண்டும், எந்த மாதிரியான சூழ்நிலைகளை உருவாக்கி கொள்ள வேண்டும் என்றும் மற்றும் பல ஆலோசனைகளை ஓய்வுபெற்ற IAS அதிகாரி திரு. ஜெகதீஷ் பாண்டியன் அவர்களும், TNPSC தேர்வுக்கு எப்படி ஆயத்தமாக வேண்டும் என்பதை St. Johns கல்லூரியின் முன்னாள் முதல்வர் திரு. ஜான் கென்னடி அவர்கள் விளக்கி சொல்லி மாணவர்களை உற்சாகப்படுத்தி பரிசுகள் கொடுத்து ஊக்கப்படுத்தினார். டாக்டர் வெஸ்லி அவர்கள் உயர் கல்வி படிப்புகளில் இருக்கும் வாய்ப்புகள் மற்றும் உதவித்தொகை பற்றி விரிவாக பேசினார்கள். கடைசியாக சகோதரர் மோகன் சி லாசரஸ் அவர்கள் வந்திருந்த மாணவர்களின் எதிர்காலம், படிப்பிற்காக ஜெபித்து, ஆசீர்வதித்து அனுப்பினார்கள். வந்திருந்த மாணவர்கள் புது நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும் கடந்து சென்றனர்.













# செய்திகள்!

## விரைவில் வரும் டிஜிட்டல் கரன்சி!

மும்பை, அக். 8: பிட்காயின்களுக்கு மாற்றாக, டிஜிட்டல் கரன்சி வெளியிடுவது குறித்து ரிசர்வ் வங்கி ஏற்கெனவே அறிவித்திருந்தது. இந்நிலையில், 'மத்திய வங்கி டிஜிட்டல் கரன்சி' எனப்படும் 'மின்னணு ரூபாய்' விரைவில் வெளியிடப்பட உள்ளதாக ரிசர்வ் வங்கி நேற்று தெரிவித்துள்ளது. இதுகுறித்து இந்த வங்கி நேற்று வெளியிட்ட அறிவிப்பில் ''டிஜிட்டல் கரன்சி எனப்படும் 'மின்னணு ரூபாய்' விரைவில் வெளியிடப்பட உள்ளது. பரிசோதனை முயற்சியில் அறிமுகம் செய்யப்பட உள்ள இது எளிதான, வசதியான, பாதுகாப்பான டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு உகந்ததாக இருக்கும். அச்சடிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகளுக்கு மாற்றானது அல்ல'' என்று கூறப்பட்டுள்ளது

– தினகரன், 08 அக்டோபர் 2022.

## ஐ.நா.வில் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக இந்திய வாக்களிப்பு!

நியூயார்க், அக். 12: உக்ரைனின் 4 நகரங்களை இணைத்ததை கண்டிக்கும் தீர்மானத்தில் ரஷ்யாவுக்கு எதிராக இந்திய வாக்களித்துள்ளது.

உக்ரைன், ரஷ்யா இடையேயான போர் 8வது மாதமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையே, போர் மூலம் தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்ட உக்ரைனின் லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், ஜபோரிஜியா ஆகிய 4 நகரங்களை ரஷ்யா தனது நாட்டுடன் சமீபத்தில் இணைத்துக் கொண்டது. இதற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. உடனடியாக ஐநா பாதுகாப்பு சபையில் ரஷ்யாவுக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அந்த தீர்மானத்தை ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தோல்வி அடையச் செய்தது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐநா பொதுச் சபையில் ரஷ்யாவுக்கு எதிராக அல்பேனியா தீர்மானம் கொண்டு வந்தது. இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ரகசியமாக நடத்த வேண்டுமென ரஷ்யா தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த கோரிக்கை குறித்து ஐநா பொதுச் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், முதல் முறையாக இந்தியா ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்தது. இந்தியா உட்பட 107 நாடுகள் வெளிப்படையான வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்களித்தன. 13 நாடுகள் ரஷ்யாவுக்கு ஆதரவாக வாக்களித்தன. 39 நாடுகள் புறக்கணித்தன. இதனால் ரஷ்யாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

– தினகரன், 12 அக்டோபர் 2022.

## மற்ற நாடுகளை விட இந்திய பொருளாதாரம் பலமாகவே இருக்கிறது! ஐ.எம்.எப் அதிகாரி தகவல்!

வாஷிங்டன், அக். 13: பல நாடுகளை விட இந்தியாவின் பொருளாதாரம் சிறப்பாக உள்ளது என்று சர்வதேச நாணய நிதி அதிகாரி தெரிவித்தார். கொரோனா காரணமாக உலகின் பொருளாதாரமும் கடுமையானப் பாதிக்கப்பட்டு உள்ளன. கடந்த நிதி ஆண்டில் (2021-2022) இந்திய பொருளாதார வளர்ச்சி 8.7 சதவீதமாக இருந்தது. ஆனால், நடப்பு நிதி ஆண்டில் (2022-2023), பொருளாதார வளர்ச்சி 6.8 சதவீதமாக குறையும் என்று சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எப்) நேற்று முன்தினம் தெரிவித்தது. இந்நிலையில், ஐஎம்எப்பின் நிர்வாக இயக்குனர் கிருஷ்ணா சீனிவான் (ஆசியா, பசிபிக் பிரிவு) நேற்று கூறுகையில், ''உலக பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கு வகிக்கும் நாடுகளில் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு பொருளாதார மந்தநிலை ஏற்படும். பணவீக்கம் கடுமையாக இருக்கும். கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலும் பாதிப்பு இருக்கும். ஆனாலும் இதர நாடுகளை ஒப்பிடும் போது இந்திய பொருளாதார நிலை சிறப்பாக உள்ளது'' என்றார்

– தினகரன், 13 அக்டோபர் 2022.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

JESUS REDEEMS MINISTRIES

50 கோடி சுவிசேஷம்

5 கோடி ஆதாயம்

VISION 2030

# இயேசு விடுவிக்கிறார்

## வாலிபர் ஊழியம்

## 10 கோடி

வாலிபர்களுக்கு சுவிசேஷம்

## 1 கோடி

வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த

**15 மணி நேர ஜெபத்திட்டம்**

தினமும் இந்த தரிசனத்திற்காக

**30 நிமிடம் ஜெபிப்பேன்**

| | | | |
|---|---|---|---|
| DAY - 1 | DAY - 2 | DAY - 3 | DAY - 4 |
| DAY - 5 | DAY - 6 | DAY - 7 | DAY - 8 |
| DAY - 9 | DAY - 10 | DAY - 11 | DAY - 12 |
| DAY - 13 | DAY - 14 | DAY - 15 | DAY - 16 |
| DAY - 17 | DAY - 18 | DAY - 19 | DAY - 20 |
| DAY - 21 | DAY - 22 | DAY - 23 | DAY - 24 |
| DAY - 25 | DAY - 26 | DAY - 27 | DAY - 28 |
| DAY - 29 | DAY - 30 | | |

Name..........................................

Mobile........................................

Place.........................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசேஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 10 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.



# குழந்தைகள் தினம்

## நவம்பர் 14, 2022

மறைந்த பிரதமர் ஜவஹர்லால் நேரு பிறந்த தினமான நவம்பர் 14-ம் தேதி, குழந்தைகள் தினமாக இந்தியாவில் கொண்டாடப்பட்டு வருகிறது. குழந்தைகள் மீது நேரு காட்டிய அன்பை வெளிப்படுத்தும் விதமாகத்தான் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.



குழந்தைகள்தான் இந்நாட்டின் உண்மையான பலம் எனவும், சமூகத்தின் அடித்தளம் எனவும் ஜவஹர்லால் நேரு மிக உறுதியாக நம்பினார். "இன்றைய குழந்தைகள்தான் நாளைய இந்தியாவை உருவாக்கப் போகிறார்கள். குழந்தைகளை நாம் எப்படி வளர்க்கிறோம் என்பதே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்" என்று தெரிவித்திருந்தார்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சிறு பிள்ளைகளை அதிகமாக நேசித்தார். சிறு பிள்ளைகள் என்னிடத்திற்கு வர இடம் கொடுங்கள் அவர்களை தடை செய்யாதீர்கள் (மத்தேயு 19: 14). ஒருவன் சிறு பிள்ளையைப் போல ஆகாவிட்டால், தன்னை தாழ்த்தாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று ஆண்டவர் கூறுகிறார்.

குழந்தைகள் நம் வாழ்வில் வசந்தத்தை கொண்டுவரும் செல்வங்கள். இக்குழந்தைகளின் உலகம் அருமையானது. கனவுகளால் நிரம்பியது. பெரியவர்களுக்கான சிக்கல்கள் அவர்கள் உலகில் இல்லை. எதையும் அப்படியே அணுகும் இயல்பு குழந்தைகளுடையது. குழந்தைகள் ஒரு அழகிய தோட்டத்தின் பூச்செடிகள். குழந்தைகள் குழந்தைகளாக வளராவிட்டால் மா மனிதராவர். மருத்துவர், பொறியாளர், வக்கீல், விஞ்ஞானி என்று எதுவாகவும் ஆகட்டும். முதலில் மனிதர்களாக அவர்கள் வளர்வது, வாழ்வது முக்கியம்.



### நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் குழந்தைகளை உருவாக்க சில ஆலோசனைகள்

- வாழ்க்கையில் விருப்பம் கொண்ட எதுவும் உடனே கிடைத்துவிடாது, விருப்பப்பட்டது கிடைத்தால் சந்தோஷம், கிடைக்காவிட்டால் உள்ளம் சோர்ந்து விடாதே என்று குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பது சிறந்தது.
- நம்பிக்கையை விதையுங்கள். குழந்தைகளிடத்தில், 'உன்னால் எதையும் செய்ய முடியும் என்று சொல்லுங்கள். அதை அவர்கள் நம்பத் தொடங்குவார்கள்.
- குழந்தைகள் விளையாடும்போது கீழே விழுந்து காயமடையட்டும். அவர்களை தடுக்காதீர்கள். அப்போதுதான் தோல்வியில் இருந்து எழுந்து, மண்ணைத் துடைத்துக்கொண்டு நடக்கக் கற்றுக் கொள்வார்கள்.
- பெற்றோர்கள் செய்யும் மிகப்பெரிய தவறுகளில் ஒன்று ஒப்பீடு. குழந்தைகளை யாருடனும் ஒப்பிடாதீர்கள். குறிப்பாக உடன்பிறந்தவர்களுடன்.

குழந்தைகள் தவறான பாதைக்கு செல்லும்போது, ஏதாவது கெட்ட செயலைச் செய்யும்போது கண்டித்து திருத்த வேண்டும். சரியான நடத்தை என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு வழிகாட்டுங்கள். முன்மாதிரியாக இருங்கள். குழந்தைகளின் இதயத்தை காயப்படுத்தும் விதமாக நடந்து கொள்ளாதீர்கள்.

நம் குழந்தைகள் ஞானவான்களாக, தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டும் ஸ்தானாதிபதிகளாய் எழும்ப ஜெபத்துடன் முயல்வோம். நம் தேசத்தின் குழந்தைகள் பிசாசின் வலையில் சிக்கிக் கொள்ளாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையில் கர்த்தருக்காகவே வளர ஜெபிப்போம். "பிதாக்களே, உங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக" (எபேசியர் 6:4).

தொகுப்பு ஜாய்லின்